பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir


விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 10 வெள்ளிக்கிழமை 24.06.2022 கதிர் 231

**இது ரகசியம் அல்ல!**

இலங்கையின் ஆட்சிப் பீடத்தினருக்கு பிரதான – நீண்ட கால – முரண்பாடு என்னவோ தமிழர்களுடன்தான். ஆனால் இன்று சிங்களவர்களையும் உள்ளடக்கிய முழு நாட்டையும் பொருளாதார நெருக்கடியில் இருந்து ☞ 2

# இலங்கைக்கு இந்தியாவின் ஆதரவு தொடர்ந்தும் கிட்டும்

## புதுடில்லியிருந்து வந்து திரும்பிய உயர் குழு கோட்டா, ரணிலிடம் நேரடியாகத் தெரிவிப்பு






கொழும்பு,ஜூன் 24

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்க நெருங்கிய அண்டை நாடாக இந்தியா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று இந்தியா உறுதி வழங்கியுள்ளது.

இலங்கைக்கு நேற்று நான்கு மணி நேரம் குறுகிய கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு வருகை தந்த இந்திய வெளிவிவகாரச் செயலாளர் வினய் குவாத்ரா தலைமையிலான பிரதிநிதிகள் குழு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வையும் நேற்றுத் தனித் தனியாகச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ☞ 2

## எரிபொருள் தீர்ந்ததால் இடையில் நின்ற ரயில்



பயணிகள் ரயில் ஒன்று எரிபொருள் தீர்ந்து விட்டதன் காரணமாக பாதியில் நிறுப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை 4.30 மணியளவில் ☞ 2

## எயிட்ஸ் நோய்த் தொற்று இளவயதினருக்கு அதிகம்

கடந்த ஆண்டில் 439 எயிட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளனர் எனத் தேசிய எயிட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் டாக்டர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 20 எச்.ஐ.வி தொற்றாளிகள் பதிவாகியுள்ளனர்.

இதில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் 20 முதல் 49 வயது வரையிலானவர்கள். கடந்த காலங்களை விடவும் இளம் வயதினர் எயிட்ஸ் நோய்த்தொற்றுக்கு உள்ளாகும் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது ☞ 2

## விரைவில் எரிவாயுவுடன் 2 கப்பல்கள் இலங்கைக்கு

ஏழாயிரம் மெட்ரிக் தொன் எரிவாயு கப்பல்கள் இரண்டு இலங்கைக்கு வரவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 5 மற்றும் 12 ஆம் திகதிகளில் இந்தக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரவுள்ளன என லிட்ரோ நிறுவனத்தில் தலைவர் தெரிவித்துள்ளார்.

## இராணுவ - பொலிஸ் அதிகாரிகள் எரிபொருள் நிலையத்தில் மோதல்



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிக்கும் இராணுவ அதிகாரிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

வறகாபொல ☞ 2

## காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் கைதாவதை அமெ. தூதுவரே தடுத்தார்

### விமல் வீரவன்ஸ நாடாளுமன்றத்தில் குற்றச்சாட்டு



காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் அனைவரையும் கைது செய்வதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்திருந்தபோது, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் நேரடியாக அதில் தலையிட்டு அதனைத் தடுத்தார் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒருமுறை காலி முகத்திடலில் போராடிக்கொண்டிருந்த 200, 300 பேரை ஒரேடியாக கைது செய்து அழைத்துச் செல்வதற்கு அதிகளவான பொலிஸ் வாகனங்கள் ☞ 2

## ம.எண்ணையின் விலை 3 மடங்கினால் உயரும்!

இந்த மாத இறுதிக்குள் மண்ணெண்ணெய் விலையை அதிகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. ☞ 2




## எதிரும் புதிருமாக வந்த பஸ்கள் மோதி விபத்து

எஹலியகொட, கெட்டஹெட்ட பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் தனியார் பஸ் ஒன்றும் எதிரும் புதிருமாக மோதி விபத்துக்குள்ளான ☞ 2

## டிராக்டர் தடம் புரண்டதில் கரடியனாறில் இருவர் சாவு

கரடியனாறு பொலிஸ்பிரிவிற்குட்பட்ட மாவடிஓடை பிரதேசத்தில் செலுத்திச் சென்ற டிராக்டர் கட்டுப்பாட்டை இழந்து தடம் புரண்டதில் சம்ப இடத்தில் இருவர் பலியான சம்பவம் ☞ 13

## இனி இது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்கும் ஆபத்பாந்தவர்களாக வந்திருப்போர் தமிழர்கள்தான். இதுதான் விதியின் விளையாட்டோ என்னவோ...!

இன்று இலங்கை மீண்டும் மூச்சு விடுவதற்கான உதவியை வழங்குவது இந்தியாதான். குறிப்பாக இந்தியத் தரப்பில் முக்கியமாக இருவர் இலங்கைக்கு உதவும் விடயங்களைக் கையாளுகின்றனர். ஒருவர் – வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர். மற்றவர் – நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். இருவருமே சுத்தத் தமிழர்கள்.

இப்போது இலங்கைக்கு மேலும் உதவிகளை வழங்கும் விடயங்களைக் கையாளுபவர் இந்திய மத்திய அரசின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி.ஆனந்த நாகேஸ்வரன். அவரும் ஒரு தமிழர்.

இலங்கை அரசு இந்தப் பொருளாதார நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்குத் தனக்கான உயர்மட்ட பொருளாதார ஆலோசகர்களாக நியமித்து இருக்கும் மூவர் குழாமிலும் இருவர் தமிழர்கள். ஒருவர் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி. மற்றவர் உலக வங்கியில் கடமையாற்றிய பொருளாதார நிபுணர் தேவராஜன். அவர்களும் தமிழர்களே.

சர்வதேச நாணய நிதியத்திடம் இப்போது இலங்கை கையேந்தி உள்ளது. அதன் சிரேஷ்ட நிலை அதிகாரியான முதலாவது பிரதி நிர்வாக இயக்குனர் கீதா கோபிநாத். தமிழர் தொடர்புள்ள மலையாளிக் குடும்பத்தில் இருந்துவந்த அமெரிக்கப் பிரசை.

சிங்களவர்களுக்குப் பிடிக்காவிட்டாலும் இந்தப் பெருமைகளை தமிழர்களாக நாம் பேசிக் கொள்ளலாம் அல்லவா...?

* * *

புதனன்று நாடாளுமன்றத்தில் இடம் பெற்ற ஒரு விடயத்தைக் காணொலியில் பார்த்தபோது எனக்கு 'ராட்சசி' படம் நினைவுக்கு வந்தது. கதாநாயகி ஜோதிகா. அவரைச் சுற்றித்தான் முழுப் படக்கதையும். அவர் ஓர் உயர் இராணுவ அதிகாரியாக இருந்து, இளவயதில் ஓய்வு பெற்று, ஒரு பின்தங்கிய பிரதேச பாடசாலை அதிபர் பதவியைத் தேடி வந்து ஏற்று, பல நெருக்கடிகளை எதிர்கொண்டு, அந்தப் பாடசாலையை உச்சநிலைக்குக் கொண்டு வருகிறார். அதையொட்டிக் கட்டவிழும் விடயங்களே படத்தின் கதை. சரியான போதனை நடத்தாத ஆசிரியர்களின் வகுப்பறைக்குள் புகுந்து, அவதானித்து, நோட்டமிட்டு, அது குறித்து விசாரிக்கும் போதும், பொதுவாகப் பல பிரச்சினைகள் எழுகின்ற போது அவற்றை எதிர்கொள்ளும் சமயங்களிலும், கதாநாயகி ஜோதிகா தனது ஒரு கையின் மூன்று விரல்களை உயர்த்தி மற்றைய இரு விரல்களையும் மடக்கியபடி 'உங்களை மூன்று கேள்விகள் கேட்கலாமா?' என்று ஆரம்பிப்பார். அந்தப் படம் முழுவதும் இந்த மூன்று கேள்விகள் கேட்கலாமா என்ற 'மனரிஸம்' ஆங்காங்கே இழையோடும்.

அதை நினைவில் வைத்தோ என்னவோ புதனன்று நாடாளுமன்றத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை பற்றி அறிக்கை ஒன்றைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்து முடித்த கையோடு, எழுந்த சுமந்திரன், பிரதமரைப் பார்த்து 'உங்களை மூன்று கேள்விகள் கேட்கலாமா?' – என்று ஆரம்பித்தார்.

"இப்போது சர்வதேச நாணய நிதியத்துடன் நடக்கும் பேச்சில் எட்டப்படுகின்ற இணக்கங்களை அது தொடர்பான உடன்பாட்டில் ஒப்பமிட முன்னர் வெளிப்படுத்துவீர்களா? எரிபொருள் இறக்குமதிக்குத் தனியாருக்கு அனுமதி வழங்க போகின்றீர்களா? நாட்டின் கடனை மீளச் செலுத்தாத விடயத்தில் ராஜபக்ஷ குடும்பத்துக்கு வேண்டியோருக்குக் கடனை அடைத்துவிட்டு, ஏனையோரை வெட்டிவிட்டீர்கள் என்று அமெரிக்காவில் இலங்கைக்கு எதிராக வழக்குத் தொடுத்த ஒரு வங்கி தெரிவித்துள்ளதே. அதன் உண்மை நிலை என்ன?" – இவைதான் சுமந்திரன் கேட்ட மூன்று கேள்விகளும்.

ஒருமாதிரி சளாப்பிப் பதிலளித்து, இப்போதைக்குச் சமாளித்தார் பிரதமர் ரணில். இந்த மூன்று பிரச்சினைகளும் விவகாரமாக தொடரும் என எதிர்பார்க்கலாம்.

**- மின்னல் -**

## எயிட்ஸ் நோய்த் தொற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என டாக்டர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துளார்.

இது ஓர் ஆபத்தான நிலை எனவும், கூடுதல் எண்ணிக்கையிலான தொற்றாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அறிமுகம் இல்லாதவர்களுடன் பாலுறவு கொள்ளும் போது பாதுகாப்பான வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது என அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

## ம.எண்ணையின் விலை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் விலை மூன்று மடங்கால் அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 87 ரூபாய்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இருப்பினும் அந்த விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 283 ரூபாய் வரையிலான நட்டத்தைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

அவ்வாறு நட்டம் ஏற்படுவதைத் தடுப்பதாக இருந்தால் மண்ணெண்ணெய்யின் விலையை லீற்றருக்கு 370 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் எனக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அதே நேரம் குறைந்த வருமானம் பெறுவோருக்கு தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஊடாக சலுகை விலையில் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இராணுவ - பொலிஸ் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும்மலதெனிய பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவ அதிகாரி ஒருவருக்கும் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

அப்போது இராணுவ அதிகாரிதிடீரென பொலிஸ் உத்தியோகத்தர் மீது தாக்குதல் நடத்தினார். அதனால் மோதல் ஏற்பட்டது. இது தொடர்பாக சி.சி.ரி.வி. காட்சிகள் வெளியாகியுள்ளன.

இராணுவ அதிகாரியினால் தாக்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் வறகாபொல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் இராணுவ அதிகாரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் நேற்று வறகாபொல நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவிருந்தார்.

## எரிபொருள் தீர்ந்ததால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு கோட்டையில் இருந்து சிலாபம் நோக்கி சென்ற ரயிலே இவ்வாறு பேரலந்தையில் நிறுத்தப்பட்டுள்ளது.

## எதிரும் புதிருமாக வந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

எஹலியகொடவில் இருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் கொழும்பில் இருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும் இவ்வாறு விபத் துக்கு உள்ளாகி உள்ளன.

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் சாரதியினால் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பஸ்ஸில் பயணித்த பலர் காயமடைந்து அவிசாவளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். யாருடைய நிலையும் கவலைக்கிடமாக இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## காலிமுகத்திடல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயார் நிலையில் காலிமுகத்திடலில் தரித்து இருந்தன.

எனினும், அவ்வாறு செய்யாது அந்த வாகனங்கள் பின்னர் திரும்பி சென்றுவிட்டன. இது தொடர்பில் நான் ஆராய்ந்து பார்த்தேன். அரசாங்கத்தின் பிரபல அமைச்சர் ஒருவருக்கு அமெரிக்கத் தூதுவர் தொலைபேசியில் அழைத்து, காலிமுகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களை கைது செய்யப் போகிறீர்களா என வினவி இருக்கிறார்.

எனினும், இதனை அறிந்திருக்காத அந்த அமைச்சர், இல்லை அவ்வாறு எதுவும் நடப்பதாக எனக்கு தெரியாது என அந்த அமைச்சர் பதிலளித்திருக்கிறார். அப்போது பதிலளித்த அமெரிக்க தூதுவர், காலி முகத்திடலில் உள்ள போராட்டக்காரர்களை கைது செய்தால் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கிடைக்கும் உதவிகள் இலங்கைக்கு கிடைக்காது. என அந்த அமைச்சரிடம் கூறி இருந்தார் எனவும் விமல் வீரவன்ஸ சபையில் தெரிவித்தார்.

## இலங்கைக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புது டெல்லியில் இருந்து விசேட விமானத்தில் வந்த குழுவினர் காலை 9.20 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கினர்.

இந்தக் குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் நிதியமைச்சின் அதிகாரிகளை சந்தித்து பேச்சு நடத்தினர்.

ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற சந்திப்பில் கருத்து வெளியிட்ட இந்தியப் பிரதிநிதிகள் குழு, இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதில் இந்திய அரசாங்கமும் அரசியல் தரப்பினரும் அர்ப்பணிப்புடன் இருக்கின்றனர் எனத் தெரிவித்தனர்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில் தொடர்ந்து ஆதரவளித்துவரும் இந்திய அரசாங்கத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

இந்த இக்கட்டான காலகட்டத்தை இலங்கை உடனடியாக சமாளிக்கும் என தூதுக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இதே சமயம் இந்தச் சந்திப்புக் குறித்து இந்தியத் தூதரகம் 'வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா தலைமையிலான பேராளர்களின் கொழும்பு விஜயம்' என்ற செய்திக் குறிப்பை வெளியிட்டது. அதில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:–

வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா தலைமையில் பொருளாதார விவகாரங்களுக்கான திணைக்களத்தின் செயலாளர் ரீ அஜய் சேத், தலைமைப் பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி. அனந்த நாகேஸ்வரன் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் இந்து சமுத்திர பிராந்தியத்துக்கான இணைச்செயலாளர் கார்த்திக் பாண்டே உள்ளிட்ட இந்திய அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் அடங்கிய பேராளர்கள் குழுவினர் 2022 ஜூன் 23 ஆம் திகதி கொழும்புக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரை இப்பேராளர்கள் சந்தித்திருந்தனர். இரு தரப்பினருக்கும் இடையிலான பேச்சுகள் வெளிப்படையாகவும், சுமுகமாகவும் ஆக்கபூர்வமான வகையிலும் நடைபெற்றன.

பிரதமர் ரீ நரேந்திர மோடி அவர்களின் நோக்கான பிராந்தியத்தில் அனைவருக்கும் வளர்ச்சியும் பாதுகாப்பும் என்ற சாகர் கோட்பாடு மற்றும் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை ஆகியவற்றின் வழிகாட்டலின் அடிப்படையிலேயே முன்னொருபோதும் இல்லாதவகையில் இலங்கை மக்களுக்கான 3.5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகபெறுமதியான பொருளாதார, நிதி மற்றும் மனிதாபிமான ரீதியிலான உதவி அமைந்துள்ளதாக இவ்விஜயத்தை மேற்கொண்டிருந்த இந்தியப் பேராளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது, இந்திய – இலங்கை இருதரப்பு உறவுகளின் அபிவிருத்திக்கான அவரது அர்ப்பணிப்பிற்காக இந்தியத் தரப்பினர் நன்றியினை தெரிவித்திருந்தனர். இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலைவரம் மற்றும் இந்தியாவால் வழங்கப்பட்டுவரும் உதவிகள் தொடர்பாகவும் பயனுள்ள கருத்துப் பரிமாற்றங்கள் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இதேவேளை இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பின்போது, இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்தும் பொருளாதார மீட்சிக்காக இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் தொடர்பாகவும் ஆழமான கலந்துரையாடல்கள் இரு தரப்பினரிடையிலும் இடம்பெற்றிருந்தன. இவ்விடயத்தில், உட்கட்டமைப்பு, தொடர்பாடல்கள், புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை மேலும் வலுவாக்கல் உள்ளிட்ட விடயங்களில், இந்தியா – இலங்கை இடையிலான முதலீட்டு பங்குடைமையை மேம்படுத்தலின் முக்கியத்து–வம் குறித்தும் இச்சந்திப்பில் இருதரப்பினரும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதேவேளை இலங்கை வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்த்தனவுடன் இந்திய வெளியுறவு செயலாளர் சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தார். இச்சந்திப்பின்போது, கிட்டிய திகதி ஒன்றில் இருதரப்பு விஜயம் ஒன்றை மேற்கொள்வது தொடர்பாகவும் இராஜதந்திர ஈடுபாட்டினை வலுவாக்குவதில் மிகுந்த ஒன்றிணைவுடன் பணியாற்றுவதற்கும் அவர்கள் இணங்கியுள்ளனர்.

பயங்கரவாத ஒழிப்பு, கடல் பாதுகாப்பு, அனர்த்த முகாமைத்துவம், மனிதாபிமான உதவி, அபிவிருத்தி ஒத்துழைப்பு, வர்த்தக ரீதியான உறவுகள் மற்றும் இரு நாட்டு மக்களிடையிலான தொடர்புகள் உள்ளிட்ட விடயங்களில் கடந்த சில ஆண்டுகளாக இந்திய மக்களாலும் அரசாங்கத்தாலும் வழங்கப்பட்டுவரும் உறுதியான ஆதரவை இலங்கை தரப்பினர் மெச்சியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பிரத்தியேக டிஜிட்டல் அடையாள முறைமை திட்டம் உட்பட 600 மில்லியன் அமெரிக்கடொலருக்கும் அதிகமான நன்கொடையுடன் இந்திய அரசாங்கத்தால் 5 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிக பெறுமதியான அபிவிருத்திஉதவிவழங்கப்பட்டுள்ளமை இச்சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்படவேண்டியவிடயமாகும். இலங்கையின் சுற்றுலாத்துறைக்கும் பாரிய பங்களிப்பினை வழங்கும் நாடாக இந்தியா தொடர்ந்தும் உள்ளது.

பிராந்திய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட அமைப்புகளின் பல்வேறு மாநாடுகள் உட்பட்ட பல தொடர்ச்சியான சந்தர்ப்பங்களிலும் இவ்வருடம் மார்ச்சில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் கூட்டங்களின்போதும் இந்தியாவால் வழங்கப்பட்ட ஆதரவினை இலங்கை தரப்பினர் வரவேற்றிருந்தனர். கொவிட்டுக்கு பின்னரான சூழலில் பொருளாதார நடவடிக்கைகளின் இயல்புநிலையினை உறுதிப்படுத்துவதற்கு ஏனைய நாடுகளும் இலங்கைக்கு உதவிசெய்யும் வகையில் இந்திய தலைமைத்துவம் மேற்கொண்டிருந்த ஊக்குவிப்பு நடவடிக்கைகள் குறித்தும் அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியிருந்தனர்.– என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி
இலக்கம்-
076 443 8622



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

# பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 076 306 8091

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பேரினவாத பூமராங்

**தமிழர்கள் தொடர்பில் சிங்கள மக்களின் பொறுமைக்கு எல்லை உண்டு என்று இனவாதம் கிளப்பிய முன்னாள் கடற்படைத் தளபதியும் பொதுசனப் பாதுகாப்பு அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவுக்குக் கனகச்சிதமாக – செமத்தியாக – பதிலடி கொடுத்திருக்கின்றார் ரெலோவின் பேச்சாளர் குருசாமி சுரேந்திரன்.**

**அதீத பாதுகாப்பில்லாமல் தென்னிலங்கை வீதிகளில் இறங்கி நடந்து பார்த்தால் சிங்கள மக்களின் பொறுமையின் எல்லையை சரத் வீரசேகர எம்.பி. புரிந்து கொள்வார் என்று சுரேந்திரன் கூறுவது வெளிப்படையான – அப்பட்டமான – உண்மை.**

**நாட்டின் இன்றைய நிலைமைக்கு – மோசமான கட்டத்திற்கு – பிரதான சூத்திரதாரி சரத் வீரசேகரவின் தானைத் தலைவரான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதான் என்பது பெரும்பான்மை சிங்களவர்கள் உட்பட முழு உலகமும் உணர்ந்து கொண்ட உண்மை. ஏன், அதை சரத் வீரசேகர கூட இப்போது உறைப்பாக உணர்ந்திருப்பார் என்று நம்பலாம்.**

**கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கிய வரலாற்றுத் தவறே இத்துணைப் பேரழிவுகளுக்கும் காரணம். அதில் யாருக்கும் சந்தேகமேயில்லை.**

**அவர் ஜனாதிபதியாக்கபட்டமை எங்ஙனம், அதில் சம்பந்தப்பட்டவர்கள் யார், சம்பந்தப்படாதவர்கள் யார் என்பவையெல்லாம் சரத் வீரசேகர இன்று தமது மக்கள் எனக் கருதும் தென்னிலங்கையின் பௌத்த, சிங்களவர்களுக்கும் நன்கு தெரியும்; புரியும். சரத் வீரசேகர போன்ற பேரினவாதிகளின் பருப்பு இனி அந்த மக்களிடம் அவியாது; எடுபடாது. அவர்கள் அத்தகைய பேரினவாதக் கயிறை இனியும் விழுங்குவதற்கு அறிவற்றவர்கள் அல்லர்.**

**தனது ஜனாதிபதி தெரிவு குறித்து கோட்டாபய ராஜபக்ஷவே பல தடவைகள் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கிறார். நான் பௌத்த, சிங்கள மக்களால் மட்டுமே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டேன் என்று அவரே திரும்பத் திரும்பக் கூறியுள்ளார்.**

**அவரது அந்தக் கூற்றுக்குள்ளே, பௌத்த, சிங்களப் பேரினவாதம் பரப்பப்பட்டு, அதன் மூலமே அவர் வெற்றி பெற்றார் என்ற உண்மை – யதார்த்தம் – வெளிப்படையாகத் தெரியக் கூடியதாக பொதிந்திருக்கிறது. அந்தக் கூற்றை – உண்மையை – ஒட்டி சிங்கள மக்கள் இரண்டு விடயங்களை இப்போது நன்கு புரிந்து கொண்டுள்ளனர்.**

**ஒன்று – பௌத்த, சிங்களப் பேரினவாதம் கிளப்பப்பட்டமை மூலமே நாட்டுக்கு பேரழிவு தரும் ஜனாதிபதி ஒருவரைப் பதவியில் அமர்த்தும் வரலாற்றுத் தவறு இழைக்கப்பட்டது என்பது.**

**அடுத்தது – நாட்டுக்கு அந்த வரலாற்றுத் தவறை இழைக்கும் கைங்கரியத்தில் தமிழர்கள், முஸ்லிம்களாகிய சிறுபான்மையினர் சம்பந்தப்படவில்லை. சரத் வீரசேகரா போன்றோர் கிளப்பிய பேரினவாதத்தை விழுங்கிய பெரும்பான்மைச் சிங்களவர்களே நாட்டுக்கும் தங்களுக்கும் தலையில் மண் வாரி கொட்டி கொண்டார்கள் என்பது.**

**இந்த இரண்டையும் இன்று பட்டுத் தெளிந்து, அதன் விபரீத விளைவுகளை அனுபவித்து உணர்ந்து கொண்டு அல்லலப்படும் பௌத்த, சிங்கள மக்களிடம் சரத் வீரசேகர போன்றோர் மீளவும் கிளப்பும் பேரினவாத உசுப்பேற்றல் செல்லுபடியாகப் போவதில்லை.**

**பேரினவாத உசுப்பேற்றலினால் தங்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள இந்த நிலையைப் புரிந்து கொண்டுள்ள சிங்கள மக்கள், வரக்கூடிய பேரினவாத உசுப்பேற்றல்களை இனி 'பூமராங்' ஆகத் திருப்பி விடுவார்கள் என்பது நிச்சயம். அதை சரத் வீரசேகர போன்றவர்கள் உணரும் காலம் விரைவில் வரும். அவர்கள் கிளப்பும் பேரினவாதமே அவர்களுக்கு அரசியல் சாவு மணியாக அமைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

# நாட்டில் மருத்துவப் பொருள்களுக்கு ஓகஸ்டுக்குப் பின் தட்டுப்பாடு வராது!

## சுகாதார அமைச்சர் கெஹலிய உத்தரவாதமளிப்பு



பல்வேறு பொது காரணிகளால் நாட்டில் ஐந்து வார காலத்துக்கு ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டை முகாமைத்துவம் செய்ய பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டு வருடங்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் இதுவரை 50 கோடி டொலர் நிதி கிடைத்துள்ளதால் ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் மருந்துப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படாதென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற சுகாதார நெருக்கடி தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் –

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையில் தினமும் பல தரப்பினராலும் முன்வைக்கப்படும் கருத்துக்கள் உண்மைக்கு புறம்பானவை.

குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் காலம் இதுவல்ல. தற்போதுள்ள நிலைமையில் நிலைமைகளை முகாமைத்துவம் செய்து முன் செல்ல வேண்டியதே அவசியம்.

மருந்து தட்டுப்பாடு தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் அடுத்து வரும் இரண்டு வருடங்களுக்குப் போதுமான நிதி கிடைத்துள்ளது.

அந்த வகையில் ஓகஸ்ட் மாதத்தின் பின்னர் அனைத்து மருந்து தட்டுப்பாடுகளும் நீங்கும். அனைத்து தேவையான மருந்துகளையும் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 வார காலத்துக்கு ஒரு சில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு காணப்பட்டாலும் அவற்றை முகாமைத்துவம் செய்ய உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உயிர்காக்கும் 14 வகையான மருந்துகள் ஒருவருட காலத்துக்குத் தேவையான அளவு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை உள்ளூர் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் மும்முரமாகச் செயற்படும் நிலையில் தேவையான மருந்துகளை உள்ளூரில் உற்பத்தி செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நாட்டில் 48 மருந்துகளுக்கான தட்டுப்பாடு நிலவுகின்ற போதும் அதற்கான மாற்று மருந்துகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. ஓகஸ்ட் மாதமளவில் அந்த மருந்துகள் அனைத்தும் கொள்வனவு செய்யப்படும்.

அநுராதபுரத்தில் சிறுவன் மரணம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அது பக்க விளைவுகளால் ஏற்பட்ட மரணம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதாரத்துறையில் வெற்றிடங்கள் என்பது ஒரு பிரதேசத்துக்கு மட்டுமானதல்ல. நாடளாவிய ரீதியில் சுமார் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர் வெற்றிடங்கள் உள்ளன. அவற்றை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்சினைகள் போக்குவரத்துடன் சம்பந்தப்பட்டவை. எரிபொருள் அமைச்சர் மற்றும் போக்குவரத்து அமைச்சருடன் பேச்சு நடத்தி அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதற்கிணங்க வெள்ளிக்கிழமைகள் தோறும் சுகாதாரத்துறையினர் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்காக 74 எரிபொருள் நிலையங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறை சார்ந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு அதன் மூலம் எரிபொருளைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க வாகனங்களுக்கு 40 லீற்றர் வீதமும் ஓட்டோக்களுக்கு 20 லீற்றர் வீதமும் மோட்டார் சைக்கிள்களுக்கு 10 லீற்றர் வீதமும் எரிபொருள் வழங்கப்படவுள்ளது. - என்றார்.

# அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்ய அரிசி ஆலை உரிமையாளர்கள் முயற்சி!

## இடமளிக்கமுடியாது எனக் கோபத்துடன் வெளியேறினார் மைத்திரியின் சகோதரர்



அரிசி ஆலை உரிமையாளர்கள் இணைந்து அதிக விலைக்கு அரிசியை விற்பனைசெய்ய முயற்சிப்பதாகக் குற்றஞ்சாட்டிய பிரபல அரிசி ஆலை உரிமையாளரும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரருமான டட்லி சிறிசேன, அதற்கு ஒருபோதும் இடமளிக்கமுடியாது என்றுகூறி ஊடகவியலாளர் சந்திப்பின் இடைநடுவில் கோபத்துடன் வெளியேறினார்.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப்பொருள்களின் விலைகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் அரிசி ஆலை உரிமையாளர்கள் இணைந்து கொழும்பில் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பில் மற்றுமொரு அரிசி ஆலை உரிமையாளர் அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்வது தொடர்பாகப் பிரஸ்தாபித்தபோது அதற்கு எதிர்ப்பை வெளிக்காட்டிய டட்லி சிறிசேன, கடும் கோபத்தையும் வெளிப்படுத்தினார். அதுமாத்திரமன்றி இந்த விடயத்தில் உண்மையான தகவல்களை வெளியிடுமாறும் அவர் வலியுறுத்தினார்.

மேலும் அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த ஏனைய ஊடகவியலாளர்கள் அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு முற்படுகின்றனர் எனக் குற்றஞ்சாட்டிய அவர், "இங்கு பொய்யுரைக்கவேண்டாம். இப்போது அரிசியின் விலையை அதிகரிப்பது தொடர்பாகப் பேசத்தேவையில்லை. அரிசியின் விலையை அதிகரிப்பதற்கே இவர்கள் திட்டமிடுகின்றார்கள். ஆனால் அதற்கு இடமளிக்கமுடியாது" என்று கூறியவாறு அங்கிருந்து கோபத்துடன் வெளியேறினார்.

அதனைத்தொடர்ந்து விளக்கமளித்த ஏனைய அரிசி ஆலை உரிமையாளர்கள், அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்வது தொடர்பாக வெளியிடப்பட்ட கருத்து அரிசி ஆலை உரிமையாளர் ஒருவரின் தனிப்பட்ட கருத்து மாத்திரமே என்றும், எனவே டட்லி சிறிசேன கூறுகின்ற விலைக்கு அரிசியை விற்பனை செய்வதற்குத் தாம் இணங்குகின்றனர் என இந்த இடத்தில் உறுதியளிப்பதாகவும் தெரிவித்தனர். அதற்கு மாறாக அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்பவர்களுக்கு எதிராக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

# ஜெனிவாவில் உள்ள நாடுகளின் அரண்மனை சர்வதேச யோகா தின தளமாக உருமாறியது

இருநூறுக்கும் மேற்பட்ட சர்வதேச சமூக உறுப்பினர்கள் முன்னிலையில், எட்டாவது சர்வதேச யோகா தினம் ஜெனிவாவில் ஐ.நா. தலைமையகமான 'பலாஸ் டெஸ் நேன்ஸில்' (நாடுகளின் அரண்மனையில்) ஐ.நா. உறுப்பு நாடுகளின் கொடிகளுக்கு மத்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது.

இந்த கொண்டாட்டத்தில் ஐ.நா. உறுப்பு நாடுகளின் நிரந்தர பிரதிநிதிகள் மற்றும் பிரதிநிதிகள், சர்வதேச அமைப்புகளின் உறுப்பினர்கள், சுவிஸ் மற்றும் இந்தியசமூகங்கள்மற்றும்மாணவர்கள்கலந்துகொண்டனர்.

'ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ்' கொண்டாட்டத்தின் ஒருபகுதியாக, சுவிஸ்யோகாகூட்டுப்பங்காளிகளான ஹார்ட்ஃபுல்னஸ் சுவிட்சர்லாந்து, வாழும் கலை, ஈஷா அறக்கட்டளை, சிவானந்த யோகா, சகஜ யோகா மற்றும் பிரம்மாகுமாரிகள் நிறுவனம் ஆகிய பல சுவிஸ் யோகா அமைப்புகள் போன்றவை இந்த நிகழ்வில் இந்தியாவின் நிரந்தர தூதரகங்கள் மற்றும் இந்திய தூதரகத்துடன் கைகோர்த்தனர்.

ஜெனிவாவில் எட்டாவது சர்வதேச யோகா தினம் சிறப்புறநடந்தேறியமையை முன்னிட்டு, வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி, தூதர் இந்திரா மணி பாண்டே, தனது வரவேற்பு உரையில், இந்தியாவின் நாகரிக பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக யோகாவின் கருத்து மற்றும் பயிற்சியை எடுத்துரைத்தார்,





ஒட்டுமொத்த மனிதகுலத்தின் நலனுக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பு வசுதைவ குடும்பம் மற்றும் சர்வோதயா கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது என்று அவர் கூறினார். மற்றும் யோகாவின் பங்களிப்பு மகத்தானது. அதே போல் யோகாவின் பண்டைய நடை முறையின் கீழ் உலகளாவிய ஆரோக்கியம், மகிழ்ச்சி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் அதன் பங்கு உலகளவில் மகத்தானது என்றார்.

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் இந்தியாவின் 75 ஆண்டுகால சுதந்திரம் மற்றும் அதன் மக்கள், கலாச்சாரம் மற்றும் சாதனைகளின் புகழ்பெற்ற வரலாற்றை நினைவுகூரும் வகையில் நாட்டில் கொண்டாடப்படுகிறது. ஐயாயிரத்துக்கும் அதிக ஆண்டுகள் பழமையான வரலாற்றைக் கொண்ட - 75 ஆண்டுகால சுதந்திர நாடாக - இந்தியாவுக்கு இது கூட்டு சாதனைகளின் கொண்டாட்டமாகும்.





# ஆப்கானில் தாக்கப்படும் சீக்கியர்களுக்காக அவர்களுடன் பக்கபலமாக நிற்கும் இந்தியா

## இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் உறுதி தெரிவிப்பு

ஆப்கானிஸ்தானில் உள்ள சிறுபான்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் விசாவிற்கு விண்ணப்பிப்பதை இந்தியா அனுதாபத்துடன் பார்க்கும் என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் தெரிவித்துள்ளார்.

அண்டை நாட்டிலுள்ள சீக்கியர்கள் மற்றும் இந்துக்களுக்காக நிற்றல் என்ற அதன் உறுதிப்பாட்டை புதுடில்லி முழுமையாகக் கடைப்பிடிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்டை நாடுகளில் உள்ள சிறுபான்மையினர் யாரேனும் மதத்தின் அடிப்படையில் துன்புறுத்தப்பட்டால் அவர்கள் தொடர்பில் பரிவோடு கவனிக்கும்படி குடியுரிமை திருத்தச் சட்டம் (சி.ஏ.ஏ) தெளிவாகக் கூறுகிறது என்று சுட்டிக் காட்டிய அவர், அங்குள்ள ஏராளமான சீக்கியர்களுக்கு விசா வழங்கியுள்ளோம் என்று ஏ.என்.ஐக்கு வழங்கிய விசேட செய்தியில் அவர் கூறியிருக்கின்றார்.

விமானங்கள் கிடைப்பதால், அவர்களில் சிலர் திரும்பி வருவார்கள், மற்றவர்கள் விண்ணப்பிப்பார்கள். அவர்களின் விண்ணப்பங்களை நாங்கள் மிகவும் அனுதாபத்துடன் - பரிவோடு - பரிசீலிப்போம், என்று அவர் மேலும் கூறினார்.

குடியுரிமை திருத்தச் சட்டத்தின் கீழ் ஆப்கானிஸ்தானில் சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த அதிகமான மக்களுக்கு இந்தியா விசா வழங்குமா என்ற கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று காபூலில் உள்ள கர்தே பர்வான் குருத்வாரா மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்த சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது என்று தோவல் தெரிவித்துள்ளார்.


அஜித் தோவல்

இது மிகவும் துரதிர்ஷ்டவசமான சம்பவம். நடந்திருக்கக் கூடாது.பயங்கரவாதம் மற்றும் வன்முறை சக்திகள் நம் மத்தியில் உள்ளன. இவற்றுடன்தான் - இந்த விடயங்களுடன்தான் நவீன காலத்தில் நாம் வாழ வேண்டியுள்ளது. இந்திய அரசு அனைத்தையும் செய்கிறது. சீக்கியர்கள் மற்றும் இந்துக்களுக்கு உறுதியளித்துள்ளது. இந்தியா தனது உறுதிப்பாட்டுடன் நிற்கும் என்று அவர்களுக்கு உறுதி கூறுகிறது" - என்றும் அவர் கூறினார்.


காபூலில் தாக்குதலுக்கு உள்ளான கர்தே பர்வான் குருத்வாரா

காபூலில் உள்ள கர்தே பர்வான் குருத்வாரா தாக்குதலுக்கு கோரசன் மாகாணம் - இஸ்லாமிய அரசு (ISKP) என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

குருத்வாரா மீதான தாக்குதலைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் உள்ள நூறுக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் மற்றும் இந்துக்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இ - விசா வழங்க இந்தியா முடிவு செய்தது.

ஆப்கானிஸ்தானில் மத சிறுபான்மையினருக்கு எதிரான பிற தாக்குதல்கள் மற்றும் வன்முறை சம்பவங்கள் தாராளமாக நடந்துள்ளன.

கடந்த ஆண்டு அக்டோபரில், காபூலின் கர்தா - இ - பர்வான் மாவட்டத்தில் உள்ள குருத்வாராவில் 15 முதல் 20 பயங்கரவாதிகள் நுழைந்து காவலர்களை கட்டிப்போட்டனர்.

மார்ச் 2020 இல், காபூலின் ஷார்ட் பஜார் பகுதியில் உள்ள ஸ்ரீ குரு ஹர் ராய் சாஹிப் குருத்வாராவில் ஒரு கொடிய தாக்குதலில் குறைந்தது 27 சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு இஸ்லாமிய தேச பயங்கரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர்.

**(மூலம்:ஏ.என்.ஐ.)**

# சிங்கள,முஸ்லிம் மக்களின் ஆதரவு இன்றி தமிழ் மக்களின் உரிமையை பெறமுடியாது!



## சாணக்கியன் வலியுறுத்து

முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் ஆதரவு இன்றி தமிழ் மக்களுக்கான தீர்வைப் பெற முடியாது எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நடந்த சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் சமூக செயற்பாட்டாளர்கள், வர்த்தகர்கள், ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் சாணக்கியன் கலந்து கொண்டார்.

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கானஉதவிகளைஒருங்கிணைப்பது மற்றும் சமகால அரசியல் தொடர்பான இந்தச் சந்திப்பிற்கான ஒழுங்குகளை சுவிட்ஸர்லாந்தில் உள்ள ஊடகவியலாளர்களான இரா.துரைரத்தினம்,தா.வேதநாயகம் ஆகியோர் செய்திருந்தனர்.

இந்தச் சந்திப்பில் சுவிட்ஸர்லாந்து சோசலிசக்கட்சியை சேர்ந்தவரும் தொழிலதிபருமான சிறி இராசமாணிக்கம், தொழிலதிபர் திருச்செல்வம், செம்மாக்கிறேத்தன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலய தலைவர் வே.கணேசகுமார், சமூக செயற்பாட்டாளர் எம்.ஜெயமோகன் ஆகியோரும் கலந்து கொண்டனர். கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வது பற்றியும் இந்தச் சந்திப்பில் கலந் துரையாடப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகளை மேற்குலக நாடுகளில் இருக்கும் வசதி படைத்தவர்கள் நேரடியாகச் செய்ய முடியும் என்றும் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நீண்டகாலமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த வடக்கு கிழக்கு பிரதேசத்தின் அபிவிருத்தியில் கவனம் செலுத்த வேண்டிய அதே நேரத்தில் தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியவர் களாக உள்ளோம்.

தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வைப் பெறுவதற்கு முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் ஆதரவையும் நாம் பெற வேண்டும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டுமாக இருந்தால் கிழக்கு மாகாணத்தில் உள்ள 20 வீத முஸ்லிம் மக்களின் ஆதரவு தேவை. அதே போன்று சிங்கள மக்களின் ஆதரவும் தேவை. அந்த ஆதரவுத் தளத்தை ஏற்படுத்தும் முயற்சியிலேயே நான் அதிக கவனம் செலுத்தி வருகிறேன் என்றும் சாணக்கியன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்கள் தமக்கான ஒரு பிரதிநிதி இல்லாத நிலை காணப்படுவதாக இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட சமூக செயற்பாட்டாளர் ஜெயமோகன் சுட்டிக் காட்டினார்.

அதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், உடல்நிலை காரணமாக சம்பந்தன் ஐயா அவர்கள் அங்கு செல்ல முடியாத போதிலும் மாதத்தில் ஒவ்வொரு போயா விடுமுறை தினத்திலும் நான் திருகோணமலைக்குச் சென்று மக்களைச் சந்தித்து வருகிறேன்.

அதேபோன்று சுமந்திரன், சிறிதரன், கலையரசன் ஆகியோரும் மாதத்தில் ஒரு நாள் திருகோணமலைக்கு சென்று அம்மக்களைச் சந்திப்பதென முடிவு செய்துள்ளனர். ஆனால் நாம் அங்கு சென்று மக்களை சந்திப்பதற்கான ஒத்துழைப்புக்களை திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழரசுக் கட்சி கிளை தருவதில்லை என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கவலை தெரிவித்தார்.

# எரிபொருள் கிடைக்காவிடின் சுகாதார சேவை ஸ்தம்பிக்கும்!

## யாழ்.போதனாவின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு

எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படுமென யாழ் போதனா வைத்தியசாலையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் –

வட மாகாணத்தில் உள்ள மக்கள் அனைவருக்குமான ஒரே ஒரு போதனா வைத்தியசாலையாக இருக்கும் எமது வைத்தியசாலை ஆளணிப் பற்றாக்குறை இருந்தபோதும் சிறப்பாக சேவையாற்றி வருவது அனைவருக்கும் தெரிந்ததே.

ஆனால், அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை எல்லோரையும் போல் எம்மையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அதிலும் எரிபொருள் இன்மை காரணமாகவும், அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் வைத்திய சேவை முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளது. இதை அனைவரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆனாலும் சில குறுகிய நோக்கம் உள்ள, மனிதநேயம் அற்ற சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை உருவாக்கி வைத்தியசாலை ஊழியர்கள் எரி பொருள் பெறுவதைத் தடுப்பதன் மூலம் இன்பம் காண்கின்றனர்.

இருப்பினும் சுகாதார அமைச்சு வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்யும் முகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வைத்தியசாலை மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் எரிபொருளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கும் முடிவை எடுத்துள்ளது.

இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாக இருப்பினும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு அரச அதிபரும், பிரதேச செயலர்களும், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு துறையினரும் மனப்பூர்வமாக முன்வர வேண்டும்.

அவ்வாறு இல்லையெனில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே பொது மக்களையும் உரிய தரப்பினரையும் உணர்ந்து செயற்பட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். –என்றுள்ளது.

# பெற்றோல் ஏற்றிய கப்பல் நாடு வருவதில் தாமதம்!

## எரிபொருள் அமைச்சர் தகவல்

பெற்றோல் ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைய ஒரு நாள் தாமதமாகும் என மின்சக்தி மற் றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

40 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் ஏற்றிய குறித்த கப்பல் நேற்று (வியாழக்கிழமை) காலை நாட்டிற்கு வரவிருந்த நிலையில், அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் நேற்று வெளியிட்டுள்ள செய்தியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி இன்று நாடளாவிய ரீதியில் மட்டுப்படுத்தப்பட்ட பெற்றோல் விநியோகிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் ஓட்டோ டீசல் முழு கொள்ளளவிற்கு விநியோகிக்கப்படும் என்றும் சுப்பர் டீசல் மட்டுப்படுத்தப்பட்ட விநியோகத்தில் இருக்கும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# திருக்கேதீச்சர ஆலய மகா கும்பாபிஷேகத்துக்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகளை செய்துதவுக!

## கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதமருக்குக் கடிதம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீச்சர ஆலய மகா கும்பாபிஷேகம் குறித்து விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவரும் திருக்கேதீச்சர திருப்பணிச்சபையின் உப தலைவருமாகிய கலாநிதி ஆறு.திருமுருகன் பிரதமருக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

சைவ சமய ஆலய அறங்காவலர்கள். சைவ சமய நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அடியவர்கள் திரளாகச்சென்றுவழிபாடு செய்யவேண்டிய முக்கிய நாள் எதிர்வரும் 04.07.2022 முதல் 06.07.2022வரை.

எனவே இத்திருநாளில் இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் சைவமக்கள் மன்னார் திருக்கேதீச்சரம் செல்லவேண்டி இருப்பதால் பிரதமரும் போக்குவரத்து துறை அமைச்சரும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்ய முன்வர வேண்டும்.

தனிப்பட்ட ரீதியில் மக்கள் செல்வதற்கு எரிபொருள் பற்றாக்குறை பெரும்பாதிப்பாக இருப்பதால் சைவமக்கள் பல வருடங்களாகக் காத்திருந்த திருக்கேதீச்சர மகா கும்பாபிஷேகத்தை தரிசிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இலங்கை இந்திய அரசின் ஒப்பந்தத்தின் கீழ் இந்திய அரசால் சுமார் 35 கோடிக்கு மேல் செலவு செய்து முற்றாக கருங்கல்லால் கட்டப்பட்டுள்ள ஆலயத்தை கண்ணால் கண்டு தரிசிப்பதற்கு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பலர் ஆவலாகக் காத்திருக்கிறார்கள்.



இந்தியாவில் இருந்து பலாலியை நோக்கி வரவுள்ள விமான சேவை குறிப்பாக திருக்கேதீச்சர ஆலயத்தை அடிப்படையாக வைத்து ஜூலை முதல்வாரம் ஆரம்பிக்கப் படவிருப்பது அனைவரும் அறிந்ததே.

எனவே இவ்விடயம் தொடர்பாகப் பிரதமரும் போக்குவரத்து அமைச்சரும் தமிழ் அரசியல்வாதிகளும் மிகுந்த அக்கறையோடு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சைவத்தமிழ் மக்கள் சார்பில் இந்த அன்பான வேண்டுதலை விடுக்கின்றேன். என்று தெரிவித்துள்ளார்.



என்.சத்தியமூர்த்தி

# தமிழ் நண்டு

## அக்கரை இக்கறை அலசல்

அண்மையில், அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவின் வடக்கு மாகாண விஜயத்தை ஒட்டி, சமூக வலைதளங்களில் 'இரு வீட்டார் அழைப்பு' என்ற தலைப்பில் வெளியான விடயம் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில், தமிழரைக் கேலி பொருளாக்கும் தொடர் முன்னெடுப்புகளில் மற்றொரு கட்டமாக அமைந்தது. அமைச்சர் சிறிபால டி சில்வா, என்னவோ பாலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன் துறை துறைமுகம் ஆகியவற்றின் பயன்பாடு குறித்து ஆராய்ந்து அறிவதற்காக வந்திருந்தார் என்று செய்திகள் தெரிவித்தன.

குறிப்பாக, தமிழர் பயன்பாட்டிற்காக இந்த முன்னெடுப்புகளை அரசு செய்ய வேண்டும் என்ற இந்திய அரசின் விருப்பம் காரணமாகவும் அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொண்டார் எனலாம். தற்போதைய பொருளாதாரச் சூழலில், இந்தியா மட்டுமே நாட்டிற்கு உதவி செய்கிறது என்றான பின்னர், புது டெல்லியின் இது போன்ற விருப்பங்களுக்கு செவி சாய்ப்பது, அரச தலைமைக்கு தவிர்க்க முடியாததாகி விட்டது.

ஆனால், விடயம் அதுவல்ல. மாறாக, சிறிபால டி சில்வா, வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்தது குறித்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் ராமநாதனும் தனிதனியாக சமூக வலைதளங்களில் செய்தி வெளியிட்டமைதான் இந்தக் குழப்பத்திற்குக் காரணம். இருவருமே, சமூக வலைதளத்தின் மூலம் சிறிபாலவின் விஜயத்திற்குத் தாங்களே காரணம் என்று பொருள்படும்படி பதிவேற்றம் செய்திருந்தார்கள்.

இதில் உண்மை என்னவோ, அமைச்சர் டக்ளஸின் முயற்சி காரணமாகவே, சிறிபால யாழ்ப்பாணம் வந்திருந்தார். அதனைத் தனதாக்கிக் கொள்ள அங்கஜன் ராமநாதன் முயன்றமை வருத்தப்பட வேண்டிய விடயம். தமிழரின் உள்வீட்டு அரசியலில், பலவாறு போட்டிபோட்டு, சண்டையிட்டுக் கொண்டாலும், வெளி உலகிற்கு, அதிலும் குறிப்பாக தென்னிலங்கைக்கு, தாங்கள் அனைவரும் ஒன்றுபட்ட இனம் என்று காட்டிக் கொள்வதில் தொடர்ந்து தமிழர் தரப்புத் தவறியே வருகிறது.

அதிலும் குறிப்பாக, அமைச்சர் தேவானந்தாவைப் பிடித்த சாபம் விடாது தொடர்கிறது. தமிழர் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழர் சார்ந்த அரசியல் தலைமைகள் அரசிற்கு ஆதரவு தெரிவித்து அமைச்சர் பதவியைப் பெறுவதற்குத் தொடர்ந்து தயக்கம் காட்டி வருகின்றன. அந்தப் பின்னணியில், தங்களது இனத்தை அடையாளப் படுத்தும் அமைச்சர் தேவானந்தாவையும்வர்கள் எதிரியாகவே பாவித்து வருகிறார்கள்.

இது, டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயம் மட்டுமல்ல. அனைத்துத் தமிழர் தரப்புகள் குறித்த விடயமும் கூட. விடுதலைப் புலிகள் பிழைவிட்டனர் என்று உரக்கக் கூறும் தமிழர் தலைமைகள் கூட, அந்த இயக்கத்தை எதிர்த்து, போராடி அரசியல் செய்த ஒரே காரணத்திற்காக, தேவானந்தா போன்ற அரசியல்வாதிகளளை இன்னமும் மட்டம் தட்டிப் பேசுகின்றன். இதுவே, தேவானந்தா தவிர்த்த பிற தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியிலும் போட்டியும் பொறாமையுமாகத் தொடர்கிறது.

**தானும் கெட்டு.....**

தமிழ் நாட்டில், மூத்த காங்கிரஸ் தலைவரான குமரி அனந்தன் ஒரு கதை சொல்லுவார். 'தமிழ் நண்டு' என்று அவரே தலைப்பிட்ட அந்தக் கதை, ஒரு பாழடைந்த கிணற்றின் கீழ் ஒரு சேர வசிக்கும் அல்லது தவிக்கும் பல்வேறு நண்டுகள் குறித்தது.

வெளியே கீற்றாகத் தெரியும் சூரிய வெளிச்சத்தைப் பார்த்து, அவற்றில் ஒரு நண்டு, கிணற்றின் சுவரில் ஊர்ந்து ஏறி, வெளியே செல்வதற்கு முயலுமாம்.



முயற்சி மிக்க அந்த நண்டைப் பார்த்து, பிற நண்டுகளும் அதன் பின்னால் அணி வகுத்துச் செல்லுமாம். அவற்றின் முயற்சி எல்லாம், வெளியுலகைக் காண வேண்டும் என்பதல்ல. மாறாக, முன்னால் செல்லும் நண்டு, வெளியேறி விடாமல், பின்னால் இருந்து, இழுத்துக் கிணற்றின் உள்ளேயே தள்ளி விடுவதுதான். இதுவே, ஒரு தொடர்கதை போல, தினமும் நிகழுமாம்.

அதாவது, தானும் கெட்டு, அடுத்தவனையும் கெடுக்கும் கதை. இதனைக் கூறும் போது, குமரி அனந்தன், அந்த நண்டுகந்த் தமிழ்நாடு அரசியல்வாதிகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவார். அவரது கூற்று, சமகால தமிழ் நாடு அரசியல்வாதிகளுக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, இலங்கைத் தமிழ் அரசியல் தலைமைகளுக்குக் கனகச்சிதமாகப் பொருந்துகிறது.

இன்னும் சொல்லப்போனால், தமிழ் அரசியல் தலைமைகள் தங்களைத் தாங்களே தாக்கிக் கொண்டு, காணாமல் போய்விடுவார்கள் என்று கணக்கிட்டு அரசியல் செய்வோரும் தென்னிலங்கையில் உள்ளார்கள். அதிலும் குறிப்பாக, எழுபதுகளில் தமிழ் இளைஞர்களின் போராளிக் குழுக்கள் தோன்றிய காலம் தொட்டு, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியைக் குறித்துப் பேசுவோர், இதனை ஏற்றுக் கொள்வார்கள்.

உண்மையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை சொல்லிமாளாது. ஆனால், பிற போராளி குழுவினர் எல்லோரையுமே 'இனத் துரோகிகள்' என்று பச்சை குத்தி, அவர்களைக் கொன்றொழித்தமையை எந்தக் கணக்கில் சேர்ப்பது? அவர்களது பொய்ப் பிரச்சாரத்திற்கு இளைஞர்கள் மட்டுமல்ல, தமிழ் அறிவுஜீவிகளும் கூட சுருண்டுவிட்டார்கள், என்பதே உண்மை.

அன்று, இந்த அறிவுஜீவிகள், விடுதலை புலிகள் இயக்கத்தை நல்வழிபடுத்தி இருந்தால், பிற்காலத்தில் கருணா தலைமையில், வடக்கு - கிழக்கு என்ற பிரிவினை தோன்றியிராது என்று கருத இடமிருக்கிறது. ஏன், இனப்போர் அல்லது இனப்பிரச்சனைக்கான அரசியல் தீர்வு ஆகியவை கூட வேறொரு பாதையில் பயணித்திருக்கலாம்.

**பிள்ளையில்லாத வீட்டில்....**

உண்மையில், தற்போதைய தமிழர் அரசியல், ஒரு பழமொழியையே நினைவுறுத்துகிறது. 'பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடினான்' என்பார்கள். அதுதானே இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளின் தலைமையின் நிலைமை? தற்போதைய தலைமுறையின் தலையாய தலைவர் என்ற நிலையில் சம்பந்தனை வைத்துப் பார்த்தாலும், மற்றுள்ள தலைவர்களில் எத்தனை பேர் இளைஞர்கள்? தமிழர் எதிர்காலம் குறித்து கவலைபடுபவாகள்? அவ்வாறு, கவலைப்பட வேண்டியவர்கள்?

இதற்காக, அனுபவ தலைவர்கள் தமிழர் அரசியலுக்கு தேவையில்லை என்றல்ல பொருள். அனுபவம் உடையோர், தாங்களே, அடுத்த தலைமுறையினருக்கு வழிவிட்டு, அவர்களை வழிநடத்தி செல்லவும் வேண்டும். அதற்கு இன்னமும் காலம் தாழ்ந்து விடவில்லை.

ஆனால், நடப்பது என்ன? கூட்டமைப்பில், சுமந்திரன், சாணக்கியன் போன்ற ஒரு சிலரை விட்டுவிட்டால், அனைத்துமே பழைய மொந்தையில் பழைய கள்தான். இவர்களிடமிருந்து எந்தவிதமாற்றுக்கருத்தும்புதியஎண்ணாங்களும் தோன்றிவிடா. இன்னும் சொல்லப் போனால், சுமந்திரன் போன்றோரே புதிய எண்ணங்களை விட்டுவிட்டு, பழைய எண்ணங்களுக்குப் புதிய பரிமாணங்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். அதில் பெருவாரியாக தோல்வியையே தழுவி உள்ளனர்.

**கனவுலகில் சஞ்சாரம்**

இவ்வாறே தொடர்ந்தால், எழுபதுகளே திரும்பி வரும் சாத்தியகூறுகளே அதிகம் உள்ளன. இல்லையென்றால், 'நீயும் ஆச்சு, உன் அரசியலும் ஆச்சு' என்று தமிழ் இளைஞர்கள், சமூக - அரசியல் ஈடுபாடுகளில் இருந்து முழுவதுமாக விலகி விட்டு, 'எப்போதடா ஆஸ்திரேலியா செல்லலாம்?' ஏன்ற தனது கனவு உலகில் முழுவதுமாக சஞ்சாரம் செய்து கொண்டிருப்பார்கள். அவர்களின் கனவுலக வாழ்க்கைக்குப் பல்வேறு உந்து சக்திகள் அவர்களது கைக்கெட்டும் தூரத்திலேயே இருக்கின்றன.

சற்றுப் பின்னோக்கிப் பார்த்தால், தனி நாடு சார்ந்த முடிவு என்று கருதப்படும் வட்டுகோட்டைத் தீர்மானம், எழுபதுகளின்



இளைஞர் போராளி குழுக்கள் தோன்றியிராவிட்டால், முன் வைக்கபட்டிருக்குமா என்பது சந்தேகமே. தந்தை செல்வா உள்ளிட்ட மிதவாதத் தலைவர்களின் சொற்களிலும் செயல்பாடுகளிலும் அர்த்தமே இல்லை என்று கருதிய இளைஞர்களே, போராளிக் குழுக்களாக உருவெடுத்தார்கள் என்பதே உண்மை.

இந்தப் போராளிக் குழுக்கள் தோன்றியிராவிட்டால், தமிழர் அரசியல் பயணம் வேறு பாதையில் சென்றிருக்கலாம். அதன் காரணமாக, அரசியல் தீர்வு தோன்றியிருக்கலாம். முற்றிலும் இல்லாமலும் ஆகியிருக்கலாம். ஆனால், தற்போதைய கையறு நிலை தோன்றி இருக்காது. இது விடுதலைப் புலிகள் தலைமையின் எண்ண முதிர்ச்சியின்மையின் தாக்கமே.

**கொம்பு சீவி, குளிர் காய்ந்து.......**

காரணம், சர்வதேச அரசியல் தெரிந்த எவருமே, ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடி வெற்றிபெறுவது எளிதல்ல என்பதை உணர்ந்திருப்பார்கள். அவ்வாறில்லாமல், உலக அனுபவமே இல்லாத இளைஞர்கள் கையில், இனப் போராட்டம் சென்றடைந்ததாலே, தற்போதைய வீழ்ச்சி நிலை என்பதை இப்போதைய இளைஞர்கள் புரிந்து உணர்ந்துகொள்ளவேண்டும். அவர்களது தலைமை தேவை. ஆனால், அதற்கு அவர்கள் தங்களைத் தயார்படுத்திக் கொள்வது அதை விட முக்கியம்.

விடுதலைப்புலிகள் உள்ளிட்ட போராளி குழுக்களுக்கு, எழுபதுகளின் மத்தியில், 1971 ஆம் ஆண்டு வங்காள தேசத்தின் சுதந்திர போர், ஒரு வித உந்து சக்தியாக அமைந்தது எனலாம். ஆனால், அந்த போராளிக் குழுக்கள் கூட, மேற்கு பாகிஸ்தானில் சிறையிருந்த முஜீபுர் ரஹ்மான் என்ற மிதவாத அரசியல் தலைவரை முன்னிறுத்தியே போரடினார்கள். முக்தி பாகினி எனப்படும் அவர்களது போராளி குழுவும், அகாலி தளம் என்ற முஜீபுர் கட்சியின் முதிர்ந்த அரசியல் தலைமையின் கீழே செயல்பட்டது.

ஆனால், அநத காலகட்டத்தை சார்ந்த தமிழ் இளைஞர்கள், தென்னிலங்கையில்



ஜே.வி.பி. என்ற இடதுசாரி இளைஞர் போராளி குழு அதே 1971 ஆம் ஆண்டின் முதல் பகுதியில், கிளர்ச்சி செய்து அதில் தோல்வியை தழுவியதை ஏனோ மறந்து செயல்பட்டார்கள். அடுத்து, 1987 - 89 காலப்பகுதியில் அரங்கேறிய இரண்டாவது ஜே.வி.பி. கிளர்ச்சியின் போது, இலங்கை இராணுவம் அறுபதாயிரத்திற்கும் மேலதிகமான தென்னிங்கை இளைஞர்களைக் கொன்று குவித்ததையும், அன்று தமிழர் மத்தியில் கோலோச்சி வந்த விடுதலைப் புலிகள் இயக்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இன்று 'இன அழிப்பு' என்று பலவிதமாக இராணுவத்தைச் சாடும் தமிழ் சமூக - அரசியல் தலைமைகள், புலம்பெயர்ந்தோர் அமைப்புகள் மற்றும் இவர்கள் இரு சாராருக்கும் கொம்பு சீவி விட்டு அதில் குளிர்காயும் சர்வதேச சமூகம், இரண்டாவது ஜே.வி.பி. எழுச்சியின் முடிவு குறித்து ஆலோசித்து செயல்பட்டிருந்தால், இந்த நிலைமை தோன்றியிருக்காது என்று கருதலாம்.

அதாவது, அன்று ஜே.வி.பி. எழுச்சியின் போது, தென்னிலங்கை இளைஞர்கள் மற்றும் யுவதிகளை போராளிகள் என்று கொன்று குவித்தவர்கள் வேறு யாரும் அல்லர். அவர்களது, மாமன் - மச்சான் உறவு முறையிலான சிங்கள - பௌத்த படை வீரர்களே. அவர்களைப் பொறுத்த வரையில், நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு அச்சுறுத்தல், அதனை முறியடிப்பதே அவர்களின் தலையாய கடமை என்று வீறூட்டி வளர்க்கப்பட்டவர்கள்.

இது தவிர, போர் முனையில், அல்லது தீவிரவாதத் தாக்குதலில் 'மிஞ்சுவது நீயா - நானா?' என்ற கேளவி எழும் போது, தந்தையாவது, தனையனாவது... அவ்வாறான எண்ணவோட்டத்திலேயே மனப் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்களிடமிருந்து தமிழர் தரப்பு ரோஜா மாலையை எதிர்பார்த்தது என்றால், இதில் பிழை விட்டது யாருடைய தரப்பு?

(10ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் பற்றி ஆழமாகச் சிந்திக்காது 21ஆவது திருத்தத்தை ஆதரிக்க முடியாது!

## கூட்டமைப்பு எம்.பி. ஜனா செவ்வி



நாடாளுமன்ற முறைமையிலேயே தந்தை செல்வாவுடனான ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. அதேபோன்று நிறைவேற்று அதிகார முறைமையினாலேயே ஸ்ரீ எழுத்து நீக்கப்பட்டது. எனவே, நிறைவேற்று அதிகாரம் என்பது இங்கு பிரச்சினை இல்லை. அது நல்லவர்களிடமிருந்தால் சில வேளைகளில் எமது மக்களுக்கு நன்மையாக இருக்கலாம். ஆனால், கோட்டாபய போன்ற மடத்தனமாகச் சிந்திக்கக் கூடியவர்களின் கைகளிலே இவ்வாறான அதிகாரம் இருப்பதனாலேயே நாங்கள் இன்று அதனை இல்லாமல் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோம்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

எமது மக்கள் பற்றி ஆழமாகச் சிந்திக்காது 21ஆவது திருத்தத்தை ஆதரிக்கவும் முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமாக இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்ட நிலைமை சம்பந்தமாகவும் பேசவேண்டியுள்ளது. உண்மையில் உணவுப் பொருள்களுக்கு மாத்திரமல்ல உணவை உற்பத்தி செய்யும் மூல பொருட்களான எரிபொருளுக்கும் மிகவும் தட்டுப்பாடான நிலை இருக்கின்றது. ஒட்டுமொத்த நாட்டிலும் தட்டுப்பாடு நிலவினாலும் விவசாயத்தை மீன்பிடியை நம்பியிருக்கும் மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கின்றது.

தற்போது அறுவடை நடைபெறவிருக்கின்றது. மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்றது.

எரிவாயுப் பிரச்சினையால் மண்ணெண்ணெய் தட்டுப்பாடான நிலையில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் அடுப்பு எரிவதற்குக்கூட சிரமமாக இருக்கின்றது. இந்த நிலையில் நீண்ட வரிசைகளைத்தான் ஒவ்வொரு எரிபொருள் நிலையங்களிலும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.

இந்த நாட்டின் நிலைமையைப் பொறுத்தமட்டில் தற்போதைய ஜனாதிபதி நாட்டின் பொருளாதார நிலைக்கு முழுமுதல் காரணமானவர். அவர் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றவுடன் தேர்தல் வாக்குறுதிக்காக வருமான வரியை மிகவும் கூடுதலாகக் குறைத்தார். 8 சதவீதத்துக்குக் கொண்டுவந்தார். விவசாய நாடான இலங்கையின் இரசாயன உர இறக்குமதியை நிறுத்தினார். 2 வருடங்களுக்குள் இந்த நாடு எப்படியிருக்கும் என்பதனைச் சிந்திக்காத மடத்தனமானதொரு ஜனாதிபதியாக சர்வதேச நாயண நிதியத்தை நாடாதிருந்தார். அந்தவகையில் இந்த நாடு இப்படியானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் இன்று சிக்கியிருக்கின்றது.

'கோட்டா கோ ஹோம்' என்று நாடு முழுவதிலுமே போராட்டங்கள் வெடித்தன. பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகும் அளவுக்குப் போராட்டம் உக்கிரமடைந்தது. அவர் விலகியவுடன் இந்த நாட்டை மீட்டெடுப்பேன் என்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்றார். அவர் பதவியேற்றதும் போராட்டக்காரர்கள் உரத்த குரலில் கோட்டாபய ராஜபக்ஷவைக் காப்பாற்றுவதற்காகத்தான் பிரதமர் பதவியை ஏற்றதாகக் கூறினார்கள். கிட்டத்தட்ட அது உண்மைபோலவே தற்போது இருக்கின்றது.

ஏனென்றால் பிரதமராக ரணில் பதவியேற்று 2 மாதங்களாகிவிட்ட போதும் நாட்டில் எந்தவிதமான மாற்றமுமில்லை. பொருளாதார நெருக்கடி கூடிக்கெண்டே செல்கின்றது. சில வேளைகளில் அனைத்துக் கட்சிகளின் கூட்டு அரசு ஏற்பட்டிருந்தால் சர்வதேச நாடுகள் நம்பிக்கையுடன் உதவி செய்திருப்பார்கள். தேசியப்பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றத்துக்கு வந்த ஒருவர் பிரதமராகப் பதவியேற்ற காரணத்தால் சஜித் பிரேமதாஸவினது அணி அவருக்கு ஆதரவு கொடுக்கவில்லை. ஜே.வி.பி. ஆதரவு கொடுக்கவில்லை. இதர கட்சிகளும், ஏன் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கூடுதலான உறுப்பினர்களும் அவருக்கு ஆதரவு கொடுக்காத நிலையில், இன்று சர்வதேசத்தின் ஒரு நம்பிக்கையான பிரதமராக அவர் இருப்பார் என்று நினைத்துக்கெண்டிருந்தாலும் கூட சர்வதேசம் அவரை நம்பி இந்த நாட்டுக்கு உதவி செய்ததாகத் தெரியவில்லை.

நாட்டின் பொருளாதாரம் வர வர மிக மோசமடைந்து கொண்டு செல்கின்றது. ரணிலின் உரைகள் கூட இரண்டு மாதங்களுக்குத்தான் உணவு இருக்கின்றது, இந்திய உதவித் திட்டத்தின் கீழ் இன்றுதான் இறுதி எண்ணெய்க் கப்பல் வருகின்றது என்கின்ற அறிவுறுத்தல்களால் மக்கள் மேலதிகமாக எரிபொருளை உணவுப்பொருட்களைச் சேகரிப்பதனால் பெரும் நெருக்கடியை இந்த நாடு சந்தித்துக் கொண்டிருக்கின்றது. எதிர்காலத்திலும் இதைவிட அதிகமான நெருக்கடியைச் சந்திப்பதற்கும் சந்தர்ப்பம் இருக்கின்றது.

அது மாத்திரமல்லாமல் ஒரு விலைக் கட்டுப்பாடு இல்லாதமையால் நாட்டிலுள்ள பெரு முதலாளிகள் தொடக்கம் சிறு வியாபாரிகள் வரை பொருட்களின் விலைகளை அவரவர் நினைத்தபடி நிர்ணயிக்கின்றமையால் மக்களின் கஷ்டம் மேலும் மேலும் பெருகிக் கொண்டே வருகின்றது.

கோட்டாபயராஜபக்ஷவைநம்பிசர்வதேசம்ஒருபோதும் உதவி செய்வதாக இல்லை. நாட்டின் அரசில் ஒரு மாற்றம் ஏற்படாதவரை இந்த நாட்டின் பொருளாதாரம் தற்போதிருக்கின்ற நிலைமையை விட மோசமாகச் செல்லும் என்பதுதான் தற்போது வெளிப்படையாக இருக்கின்றது.

தற்போது அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கதைகள் இருக்கின்றன. இந்த 21ஆவது அரசமைப்புத் திருத்தத்தினால் எமது மக்களுக்கு வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு என்ன நன்மை இருக்கின்றது என்பதை நாங்கள் சிந்திக்க வேண்டும். இதற்கு எட்டு திருத்தங்களுக்கு முன்பு வந்த 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக்கொண்டு வரப்பட்ட சட்டமூலங்கள் கூட இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இன்றும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அதனூடாக இந்த அரசு அரசியலமைப்பை மீறுகின்றதாகவே கருதப்படுகின்றது.

21ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாங்கள் ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஒரு சாராருக்கு இருக்கின்றது. இந்த 21ஆவது திருத்தச் சட்ட வரைபிலும் அவர்கள் மிக முக்கிய பங்காற்றியிருப்பதாகக் கூடக் கூறியிருக்கின்றார்கள். ஆனால், இந்த 21ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களைக் கொடுத்து நாடாளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்டு வர வேண்டும் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறான நாடாளுமன்ற ஜனநாயக முறை இருக்கும்போதுதான் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. கைச்சாத்திடப்பட்ட அந்த ஒப்பந்தங்கள் இந்த நாடாளுமன்ற ஜனநாயக முறைமையிலே கிழித்தெறியப்பட்ட வரலாறுகளே இருக்கின்றன. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை 1977ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினாலேயே முதல் முறையாகக் கொண்டுவரப்பட்டது. இதற்கு முன்னர் பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கையில் கொழுந்து விட்டெரிந்த ஸ்ரீ பிரச்சினை இரவோடு இரவாக நாடாளுமன்றத்துக்குச் சட்டமூலம் கொண்டு வரப்படாமல் நிறைவேற்று அதிகார முறையால் இல்லாமலாக்கப்பட்ட வரலாறும் உண்டு.

எனவே, நிறைவேற்று அதிகாரம் என்பது இங்கு பிரச்சினை இல்லை. அது நல்வர்களின் கைகளில் இருந்தால் சில வேளைகளில் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருக்கும் எமது மக்களுக்கு நன்மையாகவும் இருக்கலாம். ஆனால், கோட்டாபய ராஜபக்ஷ போன்ற மடத்தனமாகச் சிந்திக்கக் கூடியவர்களின் கைகளிலே இவ்வாறான நிறைவேற்று அதிகாரம் இருக்கின்ற காரணத்தினாலே தான் நாங்கள் இன்று அந்த அதிகார முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோம். இந்த நிலைப்பாட்டினால் எமது மக்களுக்கு என்ன பயன் என்பதையும் மிக முக்கியமாகச் சிந்திக்க வேண்டும்.

21ஆவது திருத்தச் சட்டத்துக்குத் தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்றால் 13ஆவது திருத்தச் சட்டத்துக்குள் இருக்கும் அதிகாரங்களை முழுமையாகப் பரவலாக்க வேண்டும் என்ற திருத்தம் 21ஆவது திருத்தச் சட்டத்துக்குள்ளே உள்வாங்கப்பட வேண்டும். அதற்கும் மேலாக நிதி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குப் பகிரப்பட வேண்டும் என்கின்ற சரத்துக்கள் கூட 21ஆவது திருத்தச் சட்டத்துக்குள் வரவேண்டும்.

இன்று அரசும், அரசுக்குள் இருப்பவர்களும் புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்களை இங்கு முதலிடுமாறு கோரிக்கை விடுக்கின்றார்கள். அவர்கள் முதலீட்டுக்காக கொண்டு வரும் பணத்துக்கு இங்கு உத்தரவாதம் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் இங்கு மாகாணங்களுக்கு நிதி அதிகாரங்கள் இருக்கும் பட்சத்தில் அவர்கள் குறிப்பிட்ட மாகாண சபைகளினூடாக அந்த அந்த மாகாணங்களிலே முதலீடுகளைச் செய்வார்கள். புலம்பெயர் தேசங்களிலே தமிழர்கள் மாத்திரமல்ல சிங்களவர்கள் கூட தனவந்தர்களாக இருக்கின்றார்கள். அவர்களும் அவர்களது மாகாண அரசுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து அந்த அந்த மாகாணங்களுக்குரிய நிதியைப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து முதலிடுவார்கள். அவ்வாறாக மாகாணசபைகளுக்குரிய நிதி அதிகாரங்கள் கூட 21ஆவது திருத்தச் சட்டத்திலே கொண்டு வரப்பட வேண்டும்.

புலம்பெயர் உறவுகள் தங்கள் நிதிகளை அவர்கள் விரும்பியவாறு பாதுகாப்பாக முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இந்த நாட்டுக்குத் தேவையான அளவுக்கு ஏன் தேவைக்கு மேலதிகமாகவும் டொலர்களைக் கொண்டு வருவதற்குரிய சாத்தியம் ஏற்படும். எனவே, 21 ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரிப்பதாக நாங்கள் இருந்தால் இவ்வாறான விடயங்கள் அதில் உள்வாங்கப் படவேண்டும் என்பது என்னுடைய உறுதியான நிலைப்பாடு. - என்றார்.

# மரக்கறிகளைக் கொள்வனவு செய்யவும் விரைவில் வரிசையில் காத்திருக்க நேரிடும்!

## பொருளாதார மத்திய நிலையத் தலைவர் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 24

மரக்கறி வகைகளைக் கொள்வனவு செய்யவும் விரைவில் வரிசையில் காத்திருக்க நேரிடும் என அகில இலங்கை பொருளாதார மத்திய நிலையம் மற்றும் மெனிங் வர்த்தக சங்கம் என்பனவற்றின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மூன்று மாதங்களின் பின்னர் நாட்டில் மரக்கறி பெற்றுக் கொள்வதற்காக மக்கள் வரிசையில் காத்திருப்பதைத் தவிர்க்க முடியாது என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மரக்கறி சந்தைக்கு சுமார் 70 வீதமான அளவு மரக்கறி வகைகளை நிரம்பல் செய்த சிறு விவசாயிகள் பயிர்ச் செய்கையைக் கைவிட்டுள்ளனர்.

நாட்டின் மொத்த விவசாயிகளில் 60 வீதமானவர்கள் சிறு விவசாயிகள். மரக்கறி செய்கையில் ஈடுபடும் சிறு விவசாயிகளில் 50 வீதமானவர்கள், மரக்கறி செய்கையை கைவிட்டுள்ளனர். எதிர்காலத்தில் ஏனைய விவசாயிகளும் செய்கையைக் கைவிடக் கூடும்.

இரசாயன உரத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு போன்ற காரணிகளால் இந்த நிலைமை உருவாகியுள்ளது.

துறைசார் அமைச்சர்கள், அதிகாரிகள் கொழும்பில் குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்து எடுக்கும் தீர்மானங்களை விவசாய நிலங்களில் நடைமுறைப்படுத்த முடியாது.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமாயின் அவர்கள் விவசாய நிலங்களுக்கு நேரில் வர வேண்டும். 40 லட்சம் கிலோ நாளாந்தம் மரக்கறி விநியோகம் செய்யப்பட்ட போதிலும் தற்பொழுது அந்த தொகை 5 லட்சம் கிலோவாகக் குறைவடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# அறநெறிக் கல்வியின் முக்கியத்துவம்



மனித உயிரினங்கள் வாழ்கின்ற இந்த வையகத்திலே மனிதனை ஆற்றுப்படுத்துகின்ற அல்லது வழிப்படுத்துகின்ற நெறிமுறைகளே விழுமியப்பண்புகள் எனப்படும். இந்த உலகத்தில் பல மனித இனங்கள், பல மதங்களைப் பின்பற்றுகின்ற மனிதர்கள் வாழுகின்றபோதிலும் அவர்களை இந்த உலகத்தில் நெறிப்படுத்துகின்ற அம்சங்களாக சமூக, சமய விழுமியப் பண்புகள் அமைகின்றன. அந்த வகையில் கடமைகளைச் செய்வனவே செய்தல், வாய்மையுடன் வாழுதல், 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்ற மகுட வாசகத்திற்கிணங்க ஏழை எளியவர்களுக்கு தான தர்மம் செய்தல், உண்மை பேசுதல், இனியவை கூறுதல், மூத்தோர்களை மதித்தல் போன்ற பல அம்சங்களைக் குறிப்பிடலாம்.

தமிழில் தோன்றிய பல அற இலக்கியங்கள் சமூகத்தை வழிப்படுத்தக்கூடிய பல விழுமியக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றன. உதாரணமாக தமிழில் தோன்றிய முதற் காப்பியமான சிலப்பதிகாரம் முத்திறக் கோட்பாட்டை வலியுறுத்தி நிற்கின்றது. அதாவது அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவார், ஊழ்வினை வந்து உறுத்தும் போன்றவையேயாகும். இதன் தொடர்ச்சியாக எழுந்த மணிமேகலை என்ற காப்பியத்தில் மணிமேகலை அட்சயபாத்திரம் ஏந்தி உணவுப் பஞ்சத்தைப் போக்கிய செய்தியைக் காண்கின்றோம். அதன் தொடர்ச்சியாக எழுந்த ஆலயங்கள் பல்லவர் காலம் தொடக்கம் பின்னர் நீண்ட காலம் வரை சமூகத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகள் பஞ்சம், பசி போன்ற பல இடர்பாடுகளை ஆலய தர்மகர்த்தா சபை மற்றும் நிர்வாக சபையூடாக மேற்கொண்டு சமூக ஒருமைப்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டன.

சங்க காலத்தில் வாழ்ந்த கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளீர் தீதும் நன்றும் பிறந்தவாரா' என்று பாடியுள்ளார். அதாவது எல்லா ஊரும் நமது ஊரே என்றும், எல்லோரும் நமது உறவினர்கள் உன்றும் நன்மையும் தீமையும் எமது செயற்பாடுகளாலேயே ஏற்படுகின்றது என்று சமூகத்தை ஆற்றுப்படுத்துகின்றார். இவ்வுலகத்துப் பொதுமறை இலக்கியமாக விளங்குகின்ற திருக்குறள் ஒரு மனிதனுக்குரிய அறம், பொருள், இன்பம் முதலியவற்றைச் செவ்வனவே விளக்குகின்றது. உயிரிலும் மேலாக ஒழுக்கத்தை இவ்விலக்கியம் வலியுறுத்துகின்றது. அதாவது

'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரிலும் ஓம்பப் படும்' என்று குறிப்பிடப்படுகின்றது.

ஒவ்வொரு சமயத்திலும் எழுந்த இலக்கியங்கள் சமூகத்தை வழிப்படுத்துவனவாகக் காணப்படுகின்றர். சைவ சமயத்தில் எழுந்த இதிகாசங்கள், புராணங்கள், சைவ சித்தாந்தங்கள் மற்றும் பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களில் நூல்களின் முறையே திரிபீடகம், விவிலிய வேதாகமம், குர்ஆன் போன்ற இலக்கியங்கள் அறத்தையே போதிக்கின்றன. மேலும் ஒவ்வொரு சமூகத்தை வழிப்படுத்துகின்ற நிலையங்களாக அறநெறிப் பாடசாலைகள் அன்று தொடக்கம் விளங்கிவருகின்றபோதிலும் இன்று சீரான ஒழுங்கமைப்பின்மை மற்றும் மாணவர்கள் அறநெறிக்கல்வி மீது நாட்டம் காட்டாமை போன்ற பல காரணங்களால் சமூகத்தில் சமூகச் சீர்கேடுகள் அதிகம் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு அறநெறிக்கல்வி இன்மையே காரணமாகும். கம்பராமாயணத்தில் தசரதன், அரிச்சந்திர மயான காண்டத்தில் அரிச்சந்திரன் போன்றோர் இந்த உலகத்தில் வாய்மையுடன் வாழ்ந்த உத்தம புருர்கள் ஆவார்கள். உயிரிலும் பார்க்க மானம் மற்றும் வாய்மையே உயர்ந்தது என்றும் அரசியல் கைமாறத்தக்கது என்றும் வாய்மை என்றுமே உலகத்தில் நிலையானது என்றும் உலகிற்குக் காட்டியவர்கள். மேலும் எமது சமூகத்தில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையே காணப்படும் உறவு என்பது உன்னதமான ஒரு விழுமியப் பண்பாகும். ஆனால் இன்று ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையில் ஒரு சீர்ற்ற உறவு நிலையே காணப்படுகின்றது. இதுவே எமது சமூகத்தின் இன்றைய கல்வியின் பின்னடைவிற்குப் பிரதான காரணமாகும்.

எனவே வகுத்து தொகுத்து நோக்கும் போது எமது சமூகத்தில் விழுமியப் பண்புகள் கடைப்பிடிக்கப்படாமையாலும் அவை சரியான முறையில் கடத்தப்படாமையாலே பல வன்முறைகள் நிகழ்கின்றன. இவற்றைக் குறைப்பதற்குச் சமூக, சமய நிறுவனங்களான ஆலயங்கள், சனசமூக நிலையங்கள், அறநெறிப் பாடசாலைகள் சமூகத்தை வழிப்படுத்துவதன் மூலம் பண்பும் அறமும் உள்ள ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பலாம் என்பது ஒரு அதீத நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

- அருளானந்தம் சிவானந்தன் -
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,
சங்கானை, பிரதேச செயலகம்)

# பதிகமும் பொழிப்பும்

**பாடல்**

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ் கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடல் ஆடல் பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.



**கருத்து**

பொங்கி, ஆரவாரித்து எழும், வெண்ணிற அலைகள் சூழ்ந்த கடலின் நடுவில் தேவ, அசுரர்கள் அமிர்தம் கடைந்து அதனால் ஏற்பட்ட வலியின் வேதனையில் வாசுகிப் பாம்பு கக்கிய வித்தை எடுத்து நீ பெருத்து உயர்ந்து, தினையளவாய் வித்தை உருட்டி, விழுங்கி, அம்பானின் தாடங்க மகிமை தெரியும்படி, அதைக் கழுத்திலேயே இருத்தியவனும் உன்னை மனமெனும் கோயிலில் இருத்தி, பேணிப் பாதுகாத்து பாடியும் ஆடியும் அல்லும் பகலும் (அல் - இரவு) உன்னையே நினைத்து பணிந்து, வணங்கித் தொழுது, எழும் அடியவர்களின் இடர்களையெல்லாம் களைத்து இன்பமெனும் தேனையே வழங்குவாய் இறைவனே, எங்கள் அப்பனே முழுமுதற்கடவுளே! திருநெடுங்கமென்னும் பதியில் உறையும் முதல்வனே! தகப்பனே!

## நல்லூர் சைவத் தமிழ்ப்பண்பாட்டுக் கலைக்கூடல் கட்டுரைப்போட்டி - 2022

**நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடல் அமைப்பினால் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு இன்று (24.06.2022) மற்றும் நாளை மறுதினம் (26.06.2022) ஆகிய தினங்களில் நடத்தப்படவிருந்த சைவம், தமிழ், பண்பாட்டு கலாசார விழுமியங்கள் தொடர்பான கட்டுரைப் போட்டிகள் நாட்டின் தற்கால சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளன என்பதனை அறியத்தருகிறோம்.**

# உறவுமுறையும் இந்து மதமும்

**வேறு எந்த மதத்திலும் இல்லாத ஒரு பெருமை இந்து மதக்கடவுளுக்கு உண்டு. ஏனெனில் கடவுளை எல்லா விதமாகவும் வழிபடும் தன்மை இந்து மதத்தில் மட்டும்தான்.**

1. தாயாக - அம்மன்
2. தந்தையாக - சிவன்
3. நண்பனாக - பிள்ளையார், கிருஷ்ணன்
4. குருவாக - தட்சிணாமூர்த்தி
5. படிப்பாக - சரஸ்வதி
6. செல்வமகளாக - லக்ஷ்மி
7. மழையாக - வருணன்
8. நெருப்பாக - அக்னி
9. அறிவாக - குமரன்
10. ஒரு வழிகாட்டியாக - பார்த்தசாரதி
11. உயிர்மூச்சாக - வாயு
12. காதலாக - மன்மதன்
13. மருத்துவனாக - தன்வந்திரி
14. வீரத்திற்கு - மலைமகள்
15. ஆய கலைக்கு - மயன்
16. கோபத்திற்கு - திரிபுரம் எரித்த சிவன்
17. ஊர்க்காவலுக்கு - ஐயனார்
18. வீட்டு காவலுக்கு - வைரவர்
19. வீட்டு பாலுக்கு - காமதேனு
20. கற்புக்கு - சீதை
21. நன் நடத்தைகளுக்கு - ராமன்
22. பக்திக்கு - அனுமன்
23. குறைகளைக் கொட்ட - வெங்கடாசலபதி
24. நன் சகோதரனுக்கு - லக்ஷ்மணன், கும்பகர்ணன்
25. வீட்டிற்கு - வாஸ்து புருஷன்
26. மொழிக்கு - முருகன்
27. கூப்பிட்ட குரலுக்கு - கிருஷ்ணன்
28. தர்மத்திற்கு - கர்ணன்
29. போர்ப் படைகளுக்கு - வீரபாகு
30. பரதத்தில் - நடராசன்
31. தாய்மைக்கு - அம்பிகை
32. அன்னத்திற்கு - அன்ன பூரணி
33. மரணத்திற்கு - யமன்
34. பாவக் கணக்கிற்கு - சித்திரகுப்தன்
35. பிறப்பிற்கு - பிரம்மன்
36. சுகப் பிரச்சவத்திற்கு - கர்ப்ப ரட்சாம்பிகை

# மதுபானத்துக்கான தேவை 30 வீதத்தால் குறைவடைவு!



நாட்டில் அண்மைக்காலமாக மதுபானத்தின் விலை அதிகரிப்பு மற்றும் நாட்டில் பொது மக்களின் வருமானம் குறைந்தமை காரணமாக மதுபானத்துக்கான தேவை 30 வீதத்தினால் குறைவடைந்திருப்பதாக அரசாங்க நிதி பற்றிய குழுவில் புலப்பட்டது.

அரசாங்க நிதி பற்றிய குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தலைமையில் கூடியபோதே இந்த விடயங்கள் வெளிப்பட்டன.

விசேடமாக அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்குத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு ஒன்லைன் முறையின் கீழ் சில நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இதற்கமைய, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை மதுவரித் திணைக்களம் மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் இவ்வாறு கலந்துகொண்டனர்.

மதுவரித் திணைக்களத்தால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை அடைவதில் சிக்கல்கள் சில காணப்பட்டன எனவும், மதுபான உற்பத்திக்கான எதனோல் குறைந்தமை, டீசல் மற்றும் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் இதற்குக் காரணமாக அமைந்தன என்றும் அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். அத்துடன், மதுபானத்தின் விலை அதிகரிப்பு, பொது மக்களுக்குக் காணப்படும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக மதுபானத்துக்கான தேவை 30 வீதத்தால் குறைவடைந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக சட்டவிரோத மதுபானத் தயாரிப்புக்கான வாய்ப்புக்கள் அதிகரித்திருக்கின்றன எனவும் இங்கு தெரியவந்தது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் எதிர்பார்க்கப்படும் வருமானம் மற்றும் தற்போதைய நிலை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. இதில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்து கொண்டமையுடன், வரிக் கொள்கைகளை எவ்வாறு மாற்றுவது மற்றும் வரி நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஒன்லைன் மூலம் கலந்துகொண்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், இந்த ஆண்டு இலங்கை கலால் திணைக்களம் பெற எதிர்பார்க்கும் வருமானம் தொடர்பிலும் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது.

# குண்டர்களின் ஒதுங்குமிடமாக மாறியுள்ளது காலிமுகத்திடல்!

## ஏன் அரசு பார்த்துக்கொண்டிருக்கின்றது என விமல் கேள்வி



காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பத்தில் நியாயமான மக்கள் போராட்டமாக இருந்து தற்போது அது, போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் மோசடியாளர்களின் கூட்டாக மாறியுள்ளது.

அதனால் ஏன் அரசாங்கம் அதனை இன்னும் பார்த்துக்கொண்டிருக்கின்றது என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் சுயாதீன எம்.பியுமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

நாட்டை அராஜக நிலைமைக்கு மாற்ற பைத்தியகாரர்கள் போன்ற செயற்படும் போராட்டம் தொடர்பில் ஏன் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? எனவும் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்,

அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

சேதன பசளை பயிர் செய்கை போன்ற சிறந்த நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட காலிமுகத் திடல் போராட்டம் தற்போது இரசாயன பயிர் செய்கைக்கு ஏற்பட்ட நிலைமை போல் மாறியுள்ளது.

தற்போது அங்கு நாட்டை அராஜகமாக்குவதற்கு போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் மோசடியாளர்கள் பைத்தியகாரத்தனமாகச் செயற்படுகின்றனர். அரசாங்கம் ஏன் இன்னும் அதனை பார்த்துக்கொண்டிருக்கின்றார்கள் எனத் தெரியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சைக் குழப்பும் வகையில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி இதற்கு ஓர் உதாரணம். சர்வதேச நாணய நிதியத்தின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு வந்திருந்த போது, அவர்களின் நடவடிக்கைகளுக்கு காலிமுகத்திடல் போராட்டகாரர்கள் தடையேற்படுத்தினர்.

நாடு ஸ்திரமற்ற நிலைமையில் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தி நாணய நிதியத்திடம் உதவி பெற்றுக்கொள்வதை தடுப்பதே போராட்டகாரர்களின் நோக்கம்.

போராட்டகாரர்கள் நாட்டை அராஜக நிலைமைக்கு மாற்ற பைத்தியகாரர்கள் போன்ற செயற்படும் போது ஏன் இன்னும் பொறுத்துக் கொண்டிருக்கின்றீர்கள்? காலிமுகத்திடலில் தற்போது இருப்பது, எதிர்கால தேர்தலில் போட்டியிட இருக்கும் சிலர் மாலை நேரத்துக்கு வந்து, வைத்தியம் விளையாடுகின்றனர். காலிமுகத்திடலில் இப்போது எந்த நேர்மையான போராட்டமும் இல்லை.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், காலிமுகத்திடல் போராட்ட நாள் ஒன்றில் பொலிஸ் வாகனங்கள், வரிசையில் நிறுத்தப்பட்டிருந்தன. போராட்டக்காரர்களை பொலிஸ் வாகனங்களில் ஏற்றிச்செல்வதற்காகவே அவை அங்கு கொண்டு வரப்பட்டிருந்தன.

இந்தநிலையில் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதுவர், பாதுகாப்புக்கு பொறுப்பான முன்னாள் அமைச்சருடன் தொடர்பு கொண்டு, காலிமுகத்திடல் போராட்டக்காரர்ளை கொண்டு செல்லவா இந்த வாகனங்கள் எடுத்துவரப்பட்டுள்ளன ? என்று வினவியதுடன், அவ்வாறு நடந்தால், சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சுக்களில் இருந்து வெளியேறவேண்டியேற்படும் என்று எச்சரித்திருக்கிறார்.இதனையடுத்து அந்த வாகனங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டன. – என்றார்.

# விஷமுறிப்பு மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை

## சன்ன ஜயசுமன தெரிவிப்பு



வைத்தியசாலைகளில் விசமுறிப்பு மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை.

4 மாத காலத்துக்குத் தேவையான விசமுறிப்பு மருந்து மருத்துவ கட்டமைப்பில் உள்ளது. திறைசேரி உரிய நேரத்தில் டொலரை வழங்காத காரணத்தால் தற்போது ஒருசில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற கூட்டத்தொடரின் போது நாட்டில் தற்போது நிலவும் சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக சபை ஒத்திவைப்பு விவாதத்தின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

மருத்துவ கட்டமைப்பில் தற்போது ஒருசில மருந்துகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு தொடர்பாகக் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 8 ஆம் திகதி அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவிற்கு உத்தியோகபூர்வமாக அறிவுறுத்தியுள்ளார்.

மருந்துக் கொள்வனவிற்கான டொலர் விநியோகத்தில் நிதியமைச்சு உரிய பதிலளிக்காத காரணத்தால் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதி செயலகத்தில் உத்தியோகபூர்வமாக பேச்சில் ஈடுபட்டோம்.

அவ்வேளை, சுகாதார அமைச்சு 13 கோடி டொலர்களைக் கோரியது. அப்போது மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் எதிர்வரும் நான்கு மாத காலத்துக்குத் தேவையான 26 கோடி டொலரை பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிட்டார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் குறிப்பிட்டதை போன்று மருந்து கொள்வனவிற்கான டொலர் கிடைக்கப்பெறவில்லை.

இதற்காகப் பல வாரங்கள் காத்திருந்தமை தொடர்பில் நிதியமைச்சின் அதிகாரிகளிடம் வினவிய போது அவர்கள் 12 வகையான மருந்துகளுக்குத் தேவையான டொலர்களை ஒதுக்க முடியாது என்றும், ஒரு வகை மருந்துக்கு மாத்திரமே டொலர்களை விநியோகிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

மயக்கமடைய செய்தல் மற்றும் மயக்கத்தைத் தெளிவித்தல் மருந்துக்குத் தட்டுப்பாடு காணப்படுகிறது. இந்த இரண்டில் எதனை தெரிவு செய்வது என்பதை நீங்கள் தெரிவுசெய்யுங்கள் என நிதியமைச்சிற்கு குறிப்பிட்டேன்.

மருந்து கொள்வனவிற்குத் தேவையான டொலர் விநியோகிப்பதை நிதியமைச்சு தாமதப்படுத்தியதைத் தொடர்ந்து இந்திய கடனுதவி திட்டம், உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் ஊடாகத் தேவையான மருந்தைப் பெற்றுக்கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம்.

இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் மருந்து கொள்வனவிற்குத் தேவையான டொலரை பெற்றுக்கொள்வது இலகுவானது அல்ல என்ற காரணத்தால் ஆசிய அபிவிருத்தி மற்றும் உலக வங்கி ஆகியவை பிற செயற்திட்டங்களுக்காக ஒதுக்கியுள்ள நிதியை மருந்து கொள்வனவிற்காக ஒதுக்குமாறு வலியுறுத்தினோம்.

பல்வேறு முயற்சிகளுக்கு மத்தியில் தேவையான டொலர் தாமதப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பெற்றுக்கொள்ளப்பட்டாலும், அது போதுமானதாகவில்லை. நிதியமைச்சு டொலர் விநியோகத்தை தாமதப்படுத்தியதால் தற்போது ஒருசில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

பாம்பு உள்ளிட்ட விச உயிரினங்கள் தீண்டினால் வைத்தியசாலைகளில் விச முறிப்பு மருந்து இல்லை என்ற தவறான செய்திகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. வைத்தியசாலைகளில் விசமுறிப்பு மருந்துகளுக்குத் தட்டுப்பாடு கிடையாது. 4 மாத காலத்துக்குத் தேவையான விசமுறிப்பு மருத்துகள் கைவசம் உள்ளன. – என்றார்.

# தமிழ் .....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது, தி.மு.கவில் இருக்கும் போது, கருணாநிதி அரசிற்கு ஆதரவாக எம்.ஜி.ஆர். ஒரு முறை கூறியது போல், பொலிஸார் துப்பாக்கியால் சுட்டால், குண்டு தான் வரும், ரோஜா பூ அல்ல. இந்த உதாரணம், இராணுவத்தினருக்கு இன்னமும் அதிகமாகவே பொருந்தும். ஆனால், இராணுவத்தின் வழிமுறைகளை அறிந்திராத தமிழ் இளைஞர்கள், போராளிக் குழுக்களில், அதுவும் குறிப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து உயிரை விட்டமைதான் மிச்சம்.

இது தவிர, இராணுவத்தினர் தமிழர் பகுதிகளில் கோவில்களையும், பள்ளி கூடங்களையும், மருத்துவமனைகளையும் தாக்கினார்கள் என்று கூறும் போது, அவற்றில் மறைந்திருந்து, விடுதலை புலிகள் இயக்கம், எதிர்த் தாக்குதலில் ஈடுபட்டது என்பதை உலகம் வேண்டுமென்றால் கண்டு கொள்ளாமல் இருக்கலாம். தமிழர் தரப்பு கூட அதனையே உலகளவில் இன்னமும் பறை சாற்றலாம். ஆனால், அதுவே, உண்மையில்லை என்பதை அவர்களது உள்ளுணர்வு உணர்த்த வேண்டும்.


இந்தப் பின்னணிகளில், தமிழர்களுக்கு வேண்டியது எல்லாம் எதிர்காலம் குறிந்த சிந்தனை. அதுவே, நாட்டின் தற்போதைய பொருளாதார சூழலில் பெரும் கவலையாக மாறி உள்ளது. ஆனால், தமிழர் சமூக – அரசியல் தலைமைகளோ, சிங்கள – பௌத்த சமுதாயத்தின் அல்லல்களைக் கண்டு எள்ளி நகையாடுவதாகவே தோன்றுகிறது. அதே பிரச்சினைகள் தங்களை இன்னும் அதிகமாகவே தாக்கும் என்பதை ஏனோ புரிந்துணர்ந்து செயல்படுவதில்லை.

மீண்டும் பாவம், தமிழ் மக்கள்!




- ந.லோகதயாளன் -

# எரிபொருள் தில்லாலங்கடி!




“யாழ் குடாநாட்டில் அரச உத்தியோகத்தர்களிற்கு எரிபொருள். பாமரன் சுடலைக்கு போகவும் பெற்றோல் இல்லை.” – என தனியார் ஆதங்கம் தெரிவிக்கின்றனர்.

“யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த 3 தினங்களாக எரிபொருள் வழங்கும் நிலையம் எதற்கு சென்றாலும் அவசர சேவைக்கு எனவும், அரச உத்தியோகத்தர்களிற்கு எனவும் தெரிவிக்கப்படுகின்றது அல்லது அவர்களிற்கு தனியான வரிசை என்கின்றனர். நான் லான்ட்மாஸ்ரர் ஓடி உழைத்தால்தான் எனது குடும்பம் சாப்பிடும். பிள்ளையல் படிப்பிற்கும் உழைக்கவும் முடியும். நான் 3 நாளாக வரிசையில் நின்றும் எரிபொருள் பெறாமல் எவ்வாறு சீவியம் நடத்துவது?” – என யாழ் நகரில் இரு சக்கர உழவு இயந்திரம் ஓடும் பரமானந்தன் ( பாமா) தெரிவிக்கின்றார்.

“அரச உத்தியோகத்தர்களிற்கு தனி வரிசை, பரீட்சை வினாத்தாள் மதிப்பீட்டு உத்தியோகத்தர்களிற்கு முன் உரிமை, சுகாதார சேவையினருக்கு தனி நாள், பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டில் ஒரு பெற்றோல் நிலையம் எனப் பிரித்து நாள் ஒதுக்கும் மாவட்டச் செயலாளருக்கு விவசாயிகளிற்கு ஒரு நாள் அல்லது ஒரு எரிபொருள் நிலையம், தினக் கூலிக்காக வாடகை சேவை நடாத்தும் என்போன்ற ஏழைகளுக்கு ஒரு பகுதி என ஒதுக்கத் தெரியவில்லை. நாம் எவ்வாறு எரிபொருளை பெறுவது? நாள் கணக்கில் காவல் நின்று, வீதியில் படுத்திருந்து, எரிபொருளை பெறும்போது ஒழுங்குபடுத்த முன்வராத மாவட்ட அரச அதிபர், இங்கு அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் இல்லை என்ற பிறகே நித்திரையால் எழுந்துள்ளார்” – என இல.36, ஏ.பி. லேன், நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் வாடகை வாகனச் சாரதியான யோசப் பத்மநாதன் தெரிவிக்கின்றார்.

“அரச உத்தியோகத்தர்கள் எரிபொருள் பெறுவதில் கடினம் என்றவுடன் வாரத்தில் 5 நாள் பணியை 4 நாள்களாக்கி சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் ஓட்டோவை நம்பியே வாழ்வாதாரம் நடத்தும் ஆயிரக்கணக்கானோருக்கு எந்த ஏற்பாடும் கிடையாது. எவரும் இதுவரை வாய் திறக்கவும் இல்லை.” – என்கின்றார் யாழ்ப்பாணம் முச்சக்கர வண்டிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஓட்டோ உரிமையாளருமான முஸ்லிம் கல்லூரி வீதியில் வசிக்கும் இராசமணி விஜயராஜா தெரிவித்தார்.

“இதேநேரம் பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் உள்ளிட்ட அரச ஊழியர்கள் பணிக்குச் சென்று ஒப்பம் இட்டு விட்டு வந்தே வரிசையில் நிற்கின்றனர். அதாவது அங்கே சம்பளம், இங்கே எரிபொருள். மீனை வாங்கி ஊர் ஊராக விற்கும் நாம் எப்போது வரிசையில் நின்றால் பெற்றோல் கிடைக்கும் எனக் கூற முடியுமா?” என வினா எழுப்புகின்றார் 43 வயதான மரியதாஸ் நியூட்டன் வின்சன்ட் போல்.

பா.நிரோஜன் (32 வயது) மானிப்பாயைச் சேர்ந்த மிக்சர் உற்பத்திகளை நடமாடும் வியாபாரம் மூலம் சந்தைப்படுத்துபவர் தெரிவிக்கையில் –

“தேவி மசாலா மிக்சர் என்னும் பெயரில் இயங்கும் எனது தொழிற்சாலையில் 12 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். எமது உற்பத்தியை படி வாகனத்தில் கொண்டு சென்றே சந்தைப்படுத்துவது வழமையாகும். இன்று வாகனத்திற்கு டீசல் இல்லை என்பதனால் ஒரு நாள் மோட்டார் சைக்கிளில் விநியோ



கம் செய்தோம். தற்போது 4 நாள்களக விநியோகத்திற்கு செல்ல டீசலும் இல்லை, பெற்றோலும் இல்லை. அதனால் அதிக செலவில் செய்த உற்பத்திகள் தேங்குவதனால் இன்று சங்கானை முதல் யாழ்ப்பாணத்திற்கு மட்டும் துவிச்சக்கர வண்டியில் சென்று சந்தைப்படுத்தும் அவலத்திற்கு தள்ளப்பட்டுள்ளேன்” – என்கின்றார்.

இவ்வாறு பொது மக்கள் தரப்பில் தெரிவித்தாலும் அரச உத்தியோகத்தர்கள் தரப்பில் ஆசிரியரான இ.சாரங்கன்கருத்து தெரிவிக்கையில் –

“இதனை தீர்ப்பதற்கு கடந்த மார்ச் மாதமே பங்கீட்டு அட்டை வழங்கி அவரவர் வசிக்கும் பிரதேச எரிபொருள் நிலையத்தில் சமமாகப் பெற்றுக்கொள்ள ஒழுங்கமைத்திருந்தால் மாவட்ட நிர்வாகம் இந்த நெருக்கடியை இன்று எதிர்நோக்கியிருக்காது”




– என்றார்.

“இதேநேரம் மாணவர்களின் கல்விக்காகவும் அடுத்த ஆண்டு கல்விச் செயற்பாட்டிற்காகவும் அனைவரது பிள்ளைகளான மாணவர்களின் வினாத்தாள் திருத்தும் பணி மாலையிலேயே நிறைவடையும். அதன் பின்பு வரிசையில் காத்திருந்து எரிபொருள் பெற்று மறுநாள் பணிக்கும் செல்ல முடியுமா? இதனை அரச உத்தியோகத்தர்கள் கூட உணர மறுக்கின்றனர்” – என வினாத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியை சிவந்நதினி தெரிவிக்கின்றார்.

“இதேநேரம் காலை 7 மணிக்கு வந்து மாலை 5 மணிக்கு செல்லும் எம்மை தனியார் மட்டுமல்ல, அரச ஊழியர்கள்,கூட மதிக்கவில்லை. மாறாக ஒழுங்குபடுத்தும் திணைக்களம் தமது திணைக்களத்திற்கு 5 ஆயிரம் ரூபா வரை எரிபொருள் வழங்கிய சம்பவமும் உண்டு. ஆசிரியர்களிற்கு 500 ரூபாவிற்கும் ஆயிரம் ரூபாவிற்கும் வழங்கப்பட்ட அதே நேரம் எமது பாடசாலை ஆசிரியர்கள் 61 பேருக்கு இலக்கம் வழங்கி 4 நாள்கள் கடந்து விட்டன. ஆனால் 20 பேரிற்கு கூட எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியவில்லை. அவ்வாறானால் வரும் எரிபொருள் எல்லாம் எங்கே போகிறது?” – என தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபரான தி.வரதன் தனது ஆதங்கத்தை தெரிவித்தார்.

இவை இவ்வாறு இருக்க நேற்றைய தினம் யாழ். நகரில் உள்ள ப.நோ.கூ.சங்கத்திறகு சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையத்தில் டீசல் இருந்தபோதும் பெற்றோலைப் பெறுவதற்காக காத்திருந்த அரச உத்தியோகத்தர்கள் அந்த டீசலை வழங்க விடாது குழப்பத்தை ஏற்படுத்தியதையும் அவதானிக்க முடிந்தது.

“அரச உத்தியோகத்தர்களே இவ்வாறு செயல்படும்போது பாமரனை குறைகூற என்ன உரிமை இந்த அரச ஊழியர்களிற்கு?” – என டிப்பர் சாரதியான கோப்பாயைச் சேர்ந்த கு.சதீஸ்குமார் கேள்வி எழுப்புகின்றார்.

இவை அனைத்தும் தொடர்பாக பிரதேச செயலாளர்களை தொடர்பு கொண்டால் மாவட்டச் செயலாளரை தொடர்புகொள்ளுமாறு பதிலளிக்கின்றனர். மாவட்டச் செயலாளரோ உரிய பதில் வழங்க முடியாது திணறுகின்றார்.

யாரோடு நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்? ஆண்ட நீ அருள் இல்லையானால்....!



**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் 44**

விக்டர் ஐவன் உட்பட்ட புத்திஜீவிகளின் சமர்ப்பணத்தை, தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட போக்கில் ஆராய்ந்தால்,



அந்தச் சமர்ப்பணம் இந்தத் தீவு பல இன மக்கள் வாழும் நாடு என ஏற்றுக்கொண்ட அடிப்படையில் முன்னேற வேண்டும் எனச் சொல்லுகிறது.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் முக்கிய செய்தியும் அதுதான். அதன் அடிப்படையில்தான் தமிழரது பிரதேசங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபயவோ தான் பதவியேற்ற காலம் முதல், தான் சிங்கள மக்களின் ஜனாதிபதி, அவர்களுக்கான ஜனாதிபதியாக அவர்களின் பெரும்பான்மை விருப்பத்தினால் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் எனக் கூறுகிறார். நமது நாடு (அப்பே ரட்ட) எனக் கூறும்போதும் அது சிங்கள, பௌத்தத்திற்கே உரியது என்பதுன், இங்கு தமிழ் மக்களுக்கு இருப்பது பொருளாதார பிரச்சினைகள் அல்லாமல் வேறு எதுவும் இல்லை என்பதும் அவரது பேரினவாத வாதம்.

அடுத்து, இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு, கிழக்கு இணைந்த மாகாண சபைகள் அமைந்தாலும், அது அரசினதும், தமிழ் மக்களது பிரதிநிதிகளினதும் போக்கினால் சீரழிந்து பயன்படுத்தப்படாமல்பெயர்உருவத்தில் மாத்திரம் உண்டு.

இரண்டு பகுதிகளும் இதை நடைமுறைப்படுத்தத் தேவையான மாற்றங்களையும் இணக்கங்களையும் பேச வேண்டும். ஆனால் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு (Aspiration) என இவற்றை இந்தியா இலங்கை அரசுடன் ஏற்படுத்தியதால் அதையொட்டிய எந்த மாற்றமும் இந்தியாவுடன் கலந்தாலோசித்துசெய்யப்படவேண்டும்என்பதாகும்.

நோக்கங்கள் நல்லபடியாக இருந்து, அதுலேயும் ஐ.நாவை உள்வாங்கினாலும், அது எடுக்கக்கூடிய காலங்களும், அதிலே ஜனாதிபதியின் எதேச்சாதிகாரம் எடுக்கக்கூடிய நிலைப்பாடுகளும் பலருக்கு ஆதங்கங்கள் தருகின்றன.

பசியும் பட்டினியும் அடுத்து இருக்கும் சந்தியில் நிற்பதால் இப்படியான தூர நோக்குப் பார்வை திட்டங்களை விடுத்து உடனடி பொருளாதார வழிமுறைகளை கேட்கிறார்கள்.

அதற்கு, இந்த நாட்டின் தலைவர்களை நம்பி உதவிகளையும் நிதியையும் வெளியில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நாடு அத்த நட்சத்திரத்தில் பிறந்து, கவிட்டுப் பானையில் பொன் தேடுதல் வேண்டும்.

### சிங்களத்துடன் சேர்ந்து தன்னிறைவு காணலாமா?

ரணில் பிரதமராக வந்து புலம்பெயர் மக்களிடம் இருந்து நிதி உதவிகளைக் கோரியபோதும் தமிழ் புலம்பெயர்வாளர்களிடமிருந்தோ அல்லது சிங்கள மக்களிடமிருந்தோ கூட எந்த நிதியும் வரவில்லை. நம்பிக்கையீனமே முதல் காரணம். அதேசமயம் அவர்களது மன ஓட்டங்களையும் கவனிக்க வேண்டும்.

சிங்களப் பேரினவாதம் தமிழ் மக்கள் முற்றுமுழுதாகத் தங்களிலேயே தங்கியிருக்க வேண்டும் எனத் திட்டங்கள் அமைக்கின்றது. அவர்களுக்கு இருக்கும் பயம், ஏதாவது ஒரு சிறிய இடைவெளி கொடுத்து விட்டால் அதிலிருந்து தமிழ் மக்கள் தன்னிறைவு கண்டு விடுவார்களோ, தங்களை மிஞ்சி விடுவார்களோ என்பதுதான். அதனால் அதிகாரங்களை ஒற்றையாட்சியின் கீழ் பிடித்து வைத்திருக்கிறார்கள். ஆக, தமிழ் மக்கள்



தங்களது பொருளாதாரத்தில் தன்னிறைவு காண இந்தப் பயங்களால் அவர்கள் விடுவார்களா என்பதைக் கவனிக்க வேண்டும். தமிழர்களை ஸ்ரீலங்காவின் அரசுகள் இதுவரை நடத்திய விதங்களிலும், அவை மேற்கொண்ட பொருளாதார அழிப்புகளையும் அபகரிப்புகளையும் வைத்து இவற்றைக் கணக்கொடுக்கலாம். தமிழர்கள் தன்னிறைவு பெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்ற குறிக்கோளிலேயே மாகாணசபை அதிகாரங்கள் இதுவரை மக்களின் பிரதிநிதிகளின் கைகளில் தரப்படாமல் இன்று வரை ஜனாதிபதியின் கட்டுப்பாட்டிலேயே வைக்கப்பட்டுள்ளன.

சிங்களப் பேரினவாதத்தின் எண்ணங்கள், சிந்தனைகளிலும் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும், இணைந்து செயற்பட வேண்டும் என்ற உண்மையான மாற்றங்கள் ஏற்படாமல் இவை நடப்பதற்கு வாய்ப்புகள் இல்லை. அப்பொழுது கூட நாட்டின் பொதுவான நிதிநிலைகளைப் பொறுத்தே தமிழ் பகுதிகளில் அபிவிருத்தி நடைபெறும்.



இவற்றின் எதிரொலியான பயமும் தயக்கமும்தான் தமிழ் புலம்பெயராளர்களை எதிர் கொண்டிருந்தன. தங்களது முதலீடுகளையும் ஆதாயங்களையும் மீளப் பெற்றுக் கொள்ள முடியுமா, அரசாங்கம் அவற்றிற்குக் கட்டுப்பாடுகள் விதிக்குமா என்பதும், இன்னும் அந்தப் பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் சமூகமாக இருப்பதும் அவர்களது தயக்கங்களை ஊக்கப்படுத்தின.

பெரும் தொழிற்பேட்டைகளிலோ, வியாபாரங்களிலோ, தொழில்நுட்பக் கட்டமைப்புகளிலோ பெரிய அளவில் அவர்கள் முதலீடு செய்வதானால், அவற்றுக்கு உத்தரவாதம் தாங்கள் பிரஜைகளாக இருக்கும் நாடுகளினால் ஸ்ரீலங்கா அரசிடம் இருந்து பெற்றுக் கொடுக்கவேண்டிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனாலும், நிலத்தில் உள்ள அன்றாடப் பாதுகாப்பு நிலைகளும், இராணுவ அடாவடித்தனங்களும் இந்த உறுதிமொழிகளை கண்டுகொள்ளா.

அதேபோல தமிழ்மக்களின் புலம்பெயர் முதலீட்டாளர்களும் சளைத்தவர்கள் அல்லர். தங்களது ஆதாயங்களிலேயே குறியாய் இருந்து, அவை எங்கே விளைவிக்கப்பட வேண்டும் என்று தெரிந்து பயிரிட்டவர்கள்.

எப்படி பொலிவூட்டில் சினிமா படங்களுக்குக் கோடிக்கணக்கில் கொட்டப்பட்டதோ, அதேபோல போர்க்காலங்களில் தாங்கள் தேடியவற்றைத் தங்களது முகவர்கள் மூலமாக முதலீடு செய்தனர். அவற்றில் பெரும்பகுதி கொழும்பை அண்டிய பிரதேசங்களிலேயே தொடர் மாடிக் கட்டடங்களாக அமைந்தன. அல்லது ஹோட்டல்கள், உணவு விடுதிகளில் வியாபாரங்களாகின. தமிழ்ப் பகுதிகளில் இருந்து போரினால் இடம் பெயர்ந்தவர்கள் பெருந்தொகை வாடகை கொடுத்து இந்த வீடுகளிலேயே இருந்தார்கள். அனேகர் வாடகைகள் கட்டுவதிலும் பார்க்க, அவற்றை வாங்கி விடுவது நல்லது என்று கருதி, வெளிநாட்டு உறவினர்கள் உதவியுடன் இவற்றைக் கிரயம் செய்தார்கள். புலம்பெயர் உல்லாசப் பயணிகள் வந்து தங்கியும் போனார்கள்.

இப்படியான முதலீடுகள் நோர்வே, சுவிஸ், ஜேர்மன் தொடர்மாடிகள் என அறியப்பட்டு, எந்தப் புலம்பெயர் நாட்டில் இருந்து நிதி முதலீடு செய்யப்பட்டது என்பதைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அவை வெள்ளவத்தை, கிருலப்பனை, பாணந்துறை, மொரட்டுவ, ராஜகிரிய என்றெல்லாம் பரந்துள்ளன.

ஆனால் அப்படி தொடர் மாடிக் கட்டடங்கள் யாழ்ப்பாணத்திற்கோ, கிளிநொச்சிக்கோ, வவுனியாவுக்கோ தேசப்பற்றுக்காகவும் சிந்திக்கப் படவில்லை என்பதும், அவை வருமானம் கருதியே நிர்மாணிக்கப்பட்டன என்பதும் வருத்தம் தரும் நிஜங்கள்.

இதைப் பற்றி கேள்விகள் எழுந்தபோது, வெளிநாட்டு முதலீட்டு சபை அந்தப் பகுதிகளுக்கு இவற்றை அனுமதிப்பதில்லை என்ற பதில் சாவகாசமாக வரும்.

ஆகவே, விடுதலைக் குழுக்கள் இயங்கிய காலங்களுக்கும், விடுதலைப் புலிகள் தேசப்பற்றை ஊட்டி வளர்த்து, சர்வதேச புலம்பெயராளர்களை நிதிகள் தர வைத்ததற்கும், இன்றைய தமிழ் அரசியல் நடைமுறைகளுக்கும் பாதைகளுக்கும் பல வித்தியாசங்கள் உண்டு.

எனவே எந்த அரசியல் பகுதியானாலும் அவை ஒருமுகப்படுத்தப்பட்டு, நமது தேசம் என்ற மனமாற்றம் வர வேண்டும். அதில்தான் நிதி உதவி தங்கியுள்ளது.

இனி இந்தியாவின் நிலையை நாளை பார்ப்போம்.

**(வளரும்)**



# குருந்தூர்மலை விடயத்தில் பொலிஸார் 30ஆம் திகதி விளக்கம் அளிக்க பணிப்பு

நீதிமன்றக் கட்டளையை மீறி முல்லைத்தீவு குருந்தூர்மலையில் அமைக்கப்பட்டுள்ள கட்டுமானப் பணிகள் தொடர்பில் விளக்கமளிக்குமாறு முல்லைத்தீவு பொலிஸாருக்குக் கட்டளையிடப்பட்டிருந்த நிலையில், நேற்றைய வழக்கு விசாரணைகளின் போது பொலிஸார் தடுமாற்றை எதிர்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பொலிஸார் விளக்கமளிப்பதற்காக வழக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் 30 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

தமிழர்களின் பூர்வீக வழிபாட்டிடங்களில் ஒன்றான முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு குருந்தூர் மலையில் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கும், அங்கு நீதிமன்ற கட்டளையைமீறி அமைக்கப்பட்ட விகாரையில் விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதைத் தொடர்ந்து அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன.

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு பொலிஸார், ஆலய நிர்வாகத்தினர் மீது அமைதியை சீர்குலைக்கும் வகையில் செயற்பட்டனர் என வழக்குத் தாக்கல் செய்துள்ள நிலையில், இந்த வழக்கை நகர்த்தல் பத்திரம் மூலம், ஆலய நிர்வாகத்தினர் மற்றும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 16 ஆம் திகதி விசாரணைக்கு கோரியிருந்தனர்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் நீதிமன்றுக்கு வழங்க வேண்டிய அறிக்கைகளை வழங்காதமை இதன்போது தெரியவந்திருந்தது.

இதனையடுத்த. பொலிஸ் தரப்பு விளக்கத்தை வழங்குமாறு நீதிமன்றம் நேற்றைய தினத்தை திகதியிட்டிருந்த நிலையில், நேற்றும் இது தொடர்பில் விளக்கமளிப்பதற்கு பொலிஸார் தவறியுள்ளனர்.

முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்காக நேற்று இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது குருந்தூர்மலை ஆதி சிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் சார்பில் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்டத்தரணிகள்பதினொருபேர்முன்னிலையாகினர்.

இதேவேளை,பொலிஸ் தரப்பில் விளக்கமளிப்பதற்காக கிளிநொச்சி, முல்லைத்தீவு பிரதி பொலிஸ் அதிபர் சமுத்திர ஜீவ, முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி கலும் சி திலகரத்ன, முல்லைத்தீவு மாவட்டத்திற்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த விதானகே, மாவட்ட தலைமை பொலிஸ் இன்ஸ்பெக்டர் அமரசிங்க உள்ளிட்டவர்கள் மன்றில் முன்னிலையாகிய போதிலும் உரிய பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

## டிராக்டர் தடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முத்திலடி வந்தாறுமூலை பிரதேசத்தைச்சேர்ந்த கண்ணப்பர் மூர்த்தி (வயது 53) என்ற இரு பிள்ளைகளின் தந்தை மற்றும் பாரதியார் வீதி கொம்மாதுறை யைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான தம்பிப்போடி சிவரெத்தினம் (58 வயது) என்பவர்களே சம்பவத்தில் பலியானவர்கள்.

இவர்கள் நீண்ட நாள்களாக அந்தப் பிரதேசத்தில் கச்சான் செய்னை பண்ணி வருகின்றனர் எனவும், சம்ப தினத்தன்று அறுவடை செய்த கச்சானை வந்தாறு மூலை பிரதேசத்தில் கொடுத்துவிட்டு திரும்பிச்சென்று கொண்டிருக்கும் போது டிராக்டர் மற்றும் இளுவைப்பெட்டி கட்டுப்பட்டை இழந்து தடம் புரண்டதில் சம்பவ இடத்தில் இருவரும் பலியாகினர் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

# குறைந்த செலவில் உள்நாட்டிலேயே பெற்றோல் மற்றும் டீசல் உற்பத்திகள்!



இலகுவாக கிடைக்கும் பொருள்களைக் கொண்டு பயோ பெற்றோல் மற்றும் பயோ டீசல் என்பவற்றை குறைந்த விலையில் உற்பத்தி செய்ய முடியும் என யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆய்வு கூட உதவியாளர் தெரிவித்தார்.

நவாலியைச் சேர்ந்த செல்வராசா சுரேஸ்குமார் அதற்கான செய்முறை விளக்கத்தை நிகழ்த்திக் காட்டினார்.

இதன்போது தேங்காய் எண்ணெய் / வேப்பெண்ணெய், சாம்பல் போன்ற இலங்கையில் இலகுவாக கிடைக்கும் மூலப் பொருள்களை வைத்து பயோ டீசலை இலகுவாக தயாரிக்க முடியும் எனவும் அதேபோன்று நீர் மற்றும் சிரட்டைக்கரி போன்ற காபன் வகைகளைப் பயன்படுத்தி பயோ பெற்றோலை இலங்கையில் உற்பத்தி செய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கான தயாரிப்பு மாதிரி செய்முறை விளக்கமும் அவரால் நிகழ்த்திக் காட்டப்பட்டது. பயோ டீசலை சாதாரணமாக வீட்டிலேயே செய்ய முடியும் எனவும் , பயோ பெற்றோல் தயாரிப்பதற்கு சுமார் 5 கோடி முதலீடு தேவைப்படும் எனவும் இதற்கு அனுசரணையாளர்களும் அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் சூழலுக்கு பாதிப்பில்லாத எரிபொருளை மிகக் குறைந்த விலையில் உற்பத்தி செய்து எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். - என்றார்.

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
+94 777 164 524
அருந்ததியின்
வரன் தேடுவோம் வாருங்கள்
திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி
யாழ்ப்பாணம் 25/06/2022
Chelva Mahal
1229, Poonari Maraththady Kokuvil.
9.00 a.m -12.00 p.m
கொழும்பு 26/06/2022
Green Palace
30 W.A. Silva Mawatha, Colombo 06.
9.00 a.m -12.00 p.m
இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடனடியாகவே பொருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.06.2022இல் வெளியிடப்பெற்றது.